3 NOV 959

ஆரம்பக்கல்வி

ஆரம்ப ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் அணா 4

மலர் 20	நவம்பர் 1959	இதழ் 11

டாக்டர் அளித்த அறிவுரைக் கொத்து!

“தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்ற பல கல்வி நிலையங்கள், அரசாங்கத்தாரால் நடத்தப்படுகின்ற கல்வி நிலையங்களைவிடச் சிறந்த முறையில் கல்விப் பணி புரிந்துவருகின்றன. ஆகவே அத்தகைய தனியார் துறைக் கல்வி நிலையங்களுக்கு அரசாங்கத்தார் தாராளமான முறையில் உதவித் தொகை அளிக்க முன்வர வேண்டும்.”

இன்றைய கல்வி நிலையங்களின் உண்மை நிலைமையை உள்ளது உள்ளவாறு எடுத்துக்காட்டி, அரசாங்கத்தார் ஆற்றவேண்டிய கடமை இன்னது என்பதையும் அழுத்தந் திருத்தமாக எடுத்துவிளக்கியுள்ள இந்த வாசகங்களை அளித்திருப்பவர் யார் என்று கருதுகிறீர்கள்?

காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்கிற முறையில் யாரோ ஒரு தனியார் பள்ளி நிர்வாகிதான் இப்படிப் பேசியிருப்பார் என்று நீங்கள் கருதக்கூடும். ஆனால் அது உண்மையல்ல.

அப்படியானால் தனியார் பள்ளி நிர்வாகிகள் சங்கம் நிறைவேற்றியுள்ள தீர்மானமாக இருக்குமோ இது என்று நீங்கள் ஐயுறக் கூடும். உண்மை, அப்படியும் இல்லை.

தனியார் பள்ளி நிர்வாகிகளின் தன்னிகரற்ற தொண்டின் சிறப்பை அடிக்கடி எடுத்துவிளக்கிப் பாராட்டும் நம் **"ஆரம்பக் கல்வி"** இதழின் பழைய தலையங்கக் கட்டுரையின் ஒரு பகுதியோ இது என்று நீங்கள் எண்ணமிடலாம். அதுவும் உண்மையல்ல.

தனியார் பள்ளிகளில் இருந்து பணியாற்றி, அப்படிப் பணியாற்றுவதன் காரணமாக உண்மை நிலையை உணர்ந்த ஆசிரியப் பெருமக்களில் யாரோ ஒருவர் பேசிய பேச்சாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கக்கூடும். அந்த நினைப்பும் சரியல்ல.

அதிசயம்தான் ஆனால் உண்மை! நம்ப முடியாதுதான் ஆனால் நடைபெற்றிருக்கிறது! நாம் முதலில் குறிப்பிட்டுள்ள கருத்துரைகளை அளித்திருப்பவர் ஓர் அமைச்சர்! அதுவும் கல்வியமைச்சர்!

"கல்வியமைச்சரா—அப்படியானால் அவர் இந்த நாட்டின் கல்வி அமைச்சராக இருக்கமாட்டார். இங்கிலாந்திலோ பிரான்சிலோ ஜெர்மனியிலோ இத்தாலியிலோ ஏதோ ஓர் வெளி நாட்டில் கல்வி அமைச்சராகத் திகழ்பவராக இருப்பார்" என்றுதானே நீங்கள் எண்ணுகிறீர்கள். இந்த முறையும் உங்கள் எண்ணம் தவறான பாதையில்தான் செல்கிறது. முதலில் குறிப்பிட்டுள்ள வாசகங்களை அளித்திருப்பவர் இந்த நாட்டின் கல்வியமைச்சர்தான்! மத்திய அரசாங்கத்தின் கல்வியமைச்சர்!

ஆம்! இந்தியப் பேரரசில் கல்வியமைச்சராக வீற்றிருக்கும் **டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி அவர்கள்** அளித்துள்ள கருத்துரைதான் நாம் தொடக்கத்தில் தந்திருப்பது.

15-11-59 அன்று, ஜலந்தர் என்னும் நகரத்தில் பத்திரிகை நிருபர்களுக்கு ஒரு பேட்டி அளித்திருக்கிறார் டாக்டர் ஸ்ரீமாலி. அந்தப் பேட்டியின்போதுதான் அவர் இந்த அரிய கருத்துரையைத் தந்திருக்கிறார்.

டாக்டர் ஸ்ரீமாலி அவர்கள் தெரிவித்துள்ள இந்தக் கருத்து, இதற்குமுன்னர் யாருமே தெரிவிக்காத புத்தம் புதிய கருத்தல்ல. பற்பல நேரங்களில் பல்வேறு துறையினர் எடுத்தெடுத்துக் கூறியுள்ள மிகப் பழைய கருத்துதான் இது. அரசாங்கத்தார் அல்லது

உள்ளாட்சி மன்றத்தார் நடத்தி வருகின்ற பள்ளிக்கூடங்களைவிடத் தனியார் பள்ளிக்கூடங்களே சிறந்த முறையில் நடத்தப்படுகின்றன என்னும் உண்மையை, இதற்கு முன்னர், எத்தனையோ முறை, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் போன்ற கல்வித்துறை வல்லுநர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர்; பேராசிரியர் இரத்தினசாமி போன்ற அறிஞர் பெருமக்கள் பாராட்டிப் புகழ்ந்துள்ளனர்; சென்னை மாநில முன்னாள் கவர்னர் ஸ்ரீ பிரகாசா போன்ற நிர்வாகத் தலைவர்கள் மனமார ஒப்புக்கொண்டு வாயாரப் போற்றியிருக்கின்றனர்; தென்னாட்டுத் திலகர் டாக்டர் வரதராசலு நாயுடு போன்ற அரசியல் தலைவர்கள் உண்மை உண்மை என்று பலமுறை ஒப்புக்கொண்டிருக்கின்றனர்; இந்து, மித்திரன், தினமணி, கல்கி, மெயில் முதலிய செய்தித் தாள்களும் கருத்து இதழ்களும் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியிருக்கின்றன. இவ்வாறு எத்தனையோ பேர் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியுள்ள அதே கருத்துரையைத்தான் இப்போது டாக்டர் ஸ்ரீமாலி அவர்களும் எடுத்துச் சொல்லியுள்ளார் என்றாலும், டாக்டர் ஸ்ரீமாலி அவர்கள் இப்போது மத்திய அரசாங்கத்தின் கல்வியமைச்சராக அல்லவா ஒளி வீசித் திகழ்ந்துகொண்டிருக்கிறார் — கல்வியமைச்சராகத் திகழ்ந்துகொண்டிருக்கும் நேரத்தில் அல்லவா இந்தக் கருத்துரையைத் தந்திருக்கிறார் — ஆகவேதான் இந்தக் கருத்துரை, மிக மிகச் சிறப்புடையது என்று நாம் கருதுகிறோம். அரசாங்கப் பள்ளிகளைவிடப் பல தனியார் பள்ளிகளே மிகச் சிறந்த முறையில் கல்விப் பணி புரிந்துவருகின்றன என்னும் உண்மையை வேறு யார் யாரோ கூறுவதைவிட அரசாங்கத்தை நடத்திச் செல்கின்ற பொறுப்பும் சிறப்பும் மிகுந்த ஓர் அமைச்சரே கூறுவது என்றால் அதுதான் மிக மிகச் சிறப்புள்ள ஓர் நிகழ்ச்சி என்பதை யார்தான் மறுக்க முடியும்? வேறு யார் யாரோ தன்னைப் ‘பிரம்ம ரிஷி’ என்று புகழ்ந்துரைத்தபோதெல்லாம் மகிழ்ச்சியடையாத விசுவாமித்திரர், வசிஷ்டரே முன்வந்து தன்னைப் பிரம்ம ரிஷி என்று பாராட்டி யுரைத்தபோது தானே மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார் என்று புராண ஏடுகள் தெரிவிக்கின்றன! டாக்டர் ஸ்ரீமாலி அவர்களால் தனியார் துறைப் பள்ளிகள் பாராட்டப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சி, வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டம் பெற்றது போன்ற மாபெரும் நிகழ்ச்சி என்று கூறினால் அந்தக் கூற்று முற்றிலும் உண்மையாகும்.

பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்திலேயும் சரி, சிறப்பாகத் தமிழ் நாட்டிலேயும் சரி, ஆரம்பக் கல்வியும் நடுத்தரக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் இன்றைய தினம் வளர்ந்து ஓங்கிச் சிறந்து பொலிகின்றன என்றால் அதற்குரிய தலையாய காரணம் தனியார் துறை

யினரின் தணியாத ஆர்வமே யாகும். சிறப்பாகவும் குறிப்பாகவும் ஆரம்பக்கல்வியைப் பொறுத்த அளவில் அதன் இன்றைய வளர்ச்சி பூரிப்பும் பெருமையும் அளிக்கத் தக்கதாக அமைந்துள்ளது என்றால், அதற்குரிய பெருமையில் பெரும் பகுதி தனியார் துறையையே சேரும். அரசாங்கத்தாரும் உள்ளாட்சி மன்றங்களும் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்காத அந்தக் காலத்திலேயே—பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே, தைரியமாகவும் துணிச்சலாகவும் முன்னால் வந்து, ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கி, கல்விப் பொருளை அள்ளி வழங்கும் கருத்துள்ள பணி புரிந்தனர் தனியார் துறையினர். ஆரம்பப் பள்ளிகளை முதலில் தொடங்கியவர்கள் அவர்கள் என்பது மட்டுமல்ல உண்மை. அரசாங்கத்தாரும் உள்ளாட்சி மன்றங்களும் தங்கள் தங்கள் துறைகளில் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கிய பிறகும் அவர்களுடைய பள்ளிகளைவிட மிகச் சிறந்த முறையில் தங்களுடைய பள்ளிகளை நடத்தி வந்தவர்கள் தனியார் துறையினர் ஆவர். அளிக்கப்படுகிற கல்வியின் தரமும் சரி, மாணவர்களின் கட்டுப்பாடும் ஒழுக்கமும் சரி, ஆசிரியர்களின் ஊக்கமும் உற்சாகமும் சரி, அரசாங்கப் பள்ளிகளைவிடத் தனியார் பள்ளிகளில் மிக உயர்ந்த நிலையிலேயே அமைந்துள்ளன என்பது நாடறிந்த உண்மை; நல்லறிஞர் அனைவரும் மனமார ஏற்றுக்கொண்ட செய்தி. இந்த உண்மை உண்மைதான் என்பதில் இதுவரை யாருக்காவது எந்தக் காரணத்தாலாவது சிறிதளவு ஐயப்பாடு இருந்திருக்குமானால் டாக்டர் ஸ்ரீமாலி அவர்களின் கருத்துரையைக் கேட்ட பிறகு அந்த ஐயம் முற்றிலும் நீங்கிவிடும் என்பது உறுதியினும் உறுதியாகும்.

அரசாங்கப் பள்ளிகளைவிடப் பற்பல தனியார் பள்ளிகள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன என்பதை எடுத்துக்காட்டியதோடு நிற்கவில்லை மத்திய அரசாங்கக் கல்வியமைச்சர் டாக்டர் ஸ்ரீமாலி. அத்தகைய பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கத்தார் ஏராளமான முறையில் உதவித் தொகை அளிக்க முன்வர வேண்டும் என்றும் தெரிவித்திருக்கிறார். மிக மிக நேர்மையான கருத்து இது. தனியார் பள்ளிகள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன என்கிற உண்மையை ஒப்புக்கொண்டால், அந்தப் பணி, தங்கு தடையின்றித் தொடர்ந்து நடைபெறுவதற்குத் தேவையான உதவியை அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்கிற உண்மையையும் ஒப்புக் கொண்டுதானே ஆகவேண்டும்? இரண்டும் இரண்டும் நான்கு என்கிற உண்மையை ஒப்புக்கொண்ட பிறகு, நான்கும் நான்கும் எட்டு என்கிற உண்மையையும் ஒப்புக்கொள்வதுதானே முறை?

ஒப்புக்கொள்கிறார் டாக்டர் ஸ்ரீமாலி. ஏராளமான அளவுக்கு உதவித் தொகை அளிக்கவேண்டியதுதான் அரசாங்கத்தின் கடமை என்பதை ஏற்றுக்கொள்கிறார்.

ஆனால் ஒப்புக்கொள்ள மறுக்கிறது தமிழ்நாட்டு அரசாங்கம்! அது ஏன்? அதுதான் நமக்குப் புரியவில்லை! நமக்கு மட்டுமா? கல்வித்துறையில் நீண்ட கால அனுபவம் படைத்த யாருக்குமே புரியவில்லை!

தனியார் துறை ஆரம்பப் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டுவந்த உதவித் தொகையை அதிகப் படுத்துவதற்கு மாறாக அவற்றிற்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டுவந்த உதவித் தொகையையும் மீண்டும் மீண்டும் குறைத்துக் கொண்டே வந்திருக்கிறார்கள் தமிழ் நாட்டு அரசாங்கத்தார்—சென்ற சில ஆண்டுகளாக.

சென்ற ஜூன் மாதத்திலிருந்து தமிழ் நாட்டில் நடைமுறையில் உள்ள அரசாங்க உத்தரவின்படி, உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகள், ஆசிரியர்களின் அடிப்படை ஊதியத்தில் 15 சதவிகித அளவுள்ள ஒரு சிறு தொகையை மட்டுமே நிர்வாக உதவித் தொகையாகப் பெற்று வருகின்றன.

இந்தச் சின்னஞ் சிறு உதவித் தொகையை மட்டும் வைத்துக் கொண்டு,

பள்ளிக்கூடக் கட்டிட வாடகை,

கட்டிடத்திற்குச் சுண்ணாம்படித்தல்—பழுது பார்த்தல்,

கல்விப் பயிற்சிக்குத் தேவையான நாட்டுப் படங்கள், கரும் பலகைகள், வெண் சுண்ணத் துண்டுகள், மேசை நாற்காலிகள் முதலியன வாங்குதல்,

ஆயாக்கள், தோட்டிகள், பியூன்கள், கட்டிடத் துப்புரவு செய்யும் வேலைக்காரிகள் ஆகியோரின் ஊதியம்,

ஆசிரியர்களின் நல்வாழ்வு நிதிக்கு நிர்வாகிகள் செலுத்த வேண்டிய பங்கு, ஆகிய இத்தனை செலவுகளையும் ஈடு கட்டுதல் இயலாத செயல் என்பதைத் தனியார் பள்ளி நிர்வாகிகள், மறுக்க முடியாத புள்ளி விவரங்களின் துணையுடன் எத்தனையோ முறை எடுத்துக்காட்டியும், தமிழ்நாட்டு அரசாங்கத்தாரின் இதயம் இன்னமும் இளகக்காணோம். தனியார் பள்ளி நிர்வாகிகள் செய்துதீர வேண்டிய இன்றியமையாத செலவு இவ்வளவு அதிகமாக இருக்கிறதே — அவர்களுக்கு நாம் தருவதாகக் கூறுகிற உதவித் தொகையோ இவ்வளவு சிறியதாக இருக்கிறதே — இந்த அளவுள்ள சின்னஞ் சிறு உதவித் தொகையைக் கொண்டு அந்த அளவுள்ள மிகப் பெரிய செலவுகளை அவர்கள் எப்படித்தான் ஈடுகட்ட முடியும் என்றெல்லாம் தமிழ்நாட்டு அரசாங்கத்தார் எண்ணிப் பார்த்ததாகவே தெரியவில்லை.

தனியார் துறைப் பள்ளிக்கூடங்களுக்கு ஏராளமான அளவில் உதவித் தொகை அளிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார் மத்திய அரசாங்கக் கல்வி அமைச்சர் டாக்டர் ஸ்ரீமாலி.

ஆனால், இன்றியமையாத செலவுகளை ஈடு கட்டுவதற்குத் தேவையான மிகக் குறைந்த உதவித் தொகையைக்கூட அளிக்க மறுக்கிறார் தமிழ்நாட்டு அரசாங்கக் கல்வி அமைச்சர் கனம் சுப்ரமண்யம்.

மத்திய அரசாங்கமோ அப்படி! தமிழ் நாட்டு அரசாங்கமோ இப்படி!! இவ்வாறு இருந்தால் நாட்டின் நிலைமை, கல்வித் துறை தான் முன்னேறுவது எப்படி?

"நடுத்தரக் கல்வியானது தனியார் நிர்வாகத்திலேயே தொடர்ந்து இருப்பதற்குத் தேவையான எல்லாவித ஏற்பாடுகளையும் செய்ய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது"

டாக்டர் ஸ்ரீமாலி அவர்கள் தெரிவித்துள்ள மற்றோர் கருத்துரை இது. முதலில் அவர் தெரிவித்துள்ள கருத்துரையின் இயற்கையான விளைவே இந்த இரண்டாவது கருத்துரை. அரசாங்கப் பள்ளிகளைவிடத் தனியார் பள்ளிகளே தலைசிறந்த முறையில் பணியாற்றி வருகின்றன என்கிற உண்மையை மனமார ஒப்புக்கொள்கிற எவரும், அந்தப் பள்ளிக்கூடங்கள் தொடர்ந்து தனியார் நிர்வாகத்திடமே இருந்து வரவேண்டும் என்பதையும், அப்படி இருந்து வருவதற்குத் தேவையான எல்லாவித வசதிகளையும் அரசாங்கத்தார் செய்துதரவேண்டும் என்பதையும் சொல்லித்தானே ஆகவேண்டும்? அதைத்தான் சொல்லியிருக்கிறார் டாக்டர் ஸ்ரீமாலி அழுத்தந் திருத்தமாக.

எல்லாக் கல்வி நிலையங்களுமே அரசாங்கத்தின் நிலையங்களாக மாற்றப்பட வேண்டும் என்று அர்த்தமற்ற முறையில் சிலர் அவசர அவசரமாகப் பேசி வருகிறார்கள் அல்லவா — அந்தப் பேச்சு எவ்வளவு பொருத்தமற்றது என்பதை ஸ்ரீமாலி அவர்களின் சொற்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டி விட்டன. அரசாங்கப் பள்ளிகளைவிடத் தனியார் பள்ளிகளே சிறந்த முறையில் பணியாற்றுகின்றன என்னும் உண்மையை அறிஞர் பெருமக்கள் மட்டுமல்ல அமைச்சர் பெருமக்களும் ஒப்புக்கொள்ளும்போது, தனியாரிடம் உள்ள பள்ளிகளை அரசாங்கப் பள்ளிகளாக மாற்றுவது எந்த வகையில் நியாயமாகும்? அப்படி மாற்றவேண்டும் என்று கூறுவது, சிறந்த முறையில் பணியாற்றி வருகின்ற பள்ளிகளை அவ்வளவு சிறப்பாகப் பணியாற்ற வேண்டாம் என்று கூறுவதாக அல்லவா பொருள்

படும்? ஆகவேதான் டாக்டர் ஸ்ரீமாலி அவர்கள், நடுத்தரக் கல்வியானது, தனியார் நிர்வாகத்திடமே தொடர்ந்து இருக்கும் என்று திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்.

நடுத்தரக் கல்வியைப் பற்றித்தான் டாக்டர் அவர்கள் இப்படித் தெரிவித்திருக்கிறாரே தவிர, ஆரம்பக் கல்வியைப்பற்றி அல்லவே என்று சிலர் ஐயவினா எழுப்பக்கூடும். அப்படிக் கேட்பவர்களைப் பார்த்து நாம் கேட்க விரும்புகிறோம்:—நடுத்தரக் கல்வியைப்பற்றி எழுப்பப்படுகிற அதே வாதங்கள்தானே ஆரம்பக்கல்வியைப் பற்றியும் எழுப்பப்படும்? நடுத்தரக் கல்வித் துறையில் எப்படி அரசாங்கப் பள்ளிகளைவிடத் தனியார் பள்ளிகள் தலைசிறந்து விளங்குகின்றனவோ அப்படித்தானே ஆரம்பக் கல்வித் துறையிலும் தனியார் பள்ளிகள் ஒப்பற்ற புகழுடன் ஒளிவீசித் திகழ்கின்றன? தனியார் பள்ளிகள் சிறந்து விளங்குகின்ற காரணத்தால்தானே நடுத்தரக் கல்வி தொடர்ந்து தனியாரிடமே இருத்தல் வேண்டும் என்று டாக்டர் ஸ்ரீமாலி தெரிவித்துள்ளார்? அப்படியானால் அதே காரணத்தை முன்னிட்டு ஆரம்பக் கல்வியும் தொடர்ந்து தனியாரிடம் இருத்தல் வேண்டும் என்கிற கருத்து இயற்கையாகவே உருவாகிறதா இல்லையா?

பள்ளிக்கூடங்களை நடத்துவதற்குத் தேவையான பணத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அரசாங்கத்தார்தானே உதவித் தொகையாகத் தருகிறார்கள்! நிலைமை இப்படியிருக்கும்போது பள்ளிக்கூடங்களை அரசாங்கத்தாரே எடுத்துக்கொண்டால் என்ன தவறு என்று சிலர் சிற்சில சமயங்களில் பேசுகிறார்கள் அல்லவா? அப்படிப்பட்டவர்களைப் பார்த்து டாக்டர் ஸ்ரீமாலி அவர்கள் தெரிவிக்கிறார்:—

“பள்ளிக்கூடங்களை நடத்துவதற்குத் தேவையான பணத்தில் 100 க்கு 99 பங்கு அரசாங்கத்தாரே தருவதாக இருந்தால்கூட, கல்வித் துறையானது தனியார் நிர்வாகத்திடமே தொடர்ந்து இருத்தல் கூடாது என்று கூறுவதற்கு எத்தகைய நியாயமான காரணமும் இருப்பதாக எனக்குப் புலனாகவில்லை.”

இந்தியப் பேரரசின் கல்வி யமைச்சர் டாக்டர் ஸ்ரீமாலி அவர்கள் தெரிவித்துள்ள இந்தக் கருத்துக்கள் யாவும் நியாயத்துக்கு ஒத்தவையாகவும், நடைமுறைக்கு ஏற்றவையாகவும், கல்வித் துறை வல்லுநர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவையாகவும், நல்லறிஞர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாகவும் அமைந்துள்ளன என்பதை எவரும் மறுத்தல் இயலாது.

டாக்டர் அவர்கள் அளித்துள்ள இந்தக் கருத்துரைகளைத் தமிழ் நாட்டின் முதலமைச்சர் திருவாளர் காமராசர் அவர்களும், கல்வி

மின்மினிப் பூச்சி மின்னுவதேன் ?

பறக்கும் பூச்சி ஒன்று இரவில் ஒளி வீசுகிறது. அது மின்மினிப் பூச்சி. மின்மினிப் பூச்சியைத் துரத்திப் பிடித்து விளையாடுகின்றனர் சிறுவர்.

கிரேக்கரும் ரோமரும் சிறப்புற்று விளங்கிய காலத்தில் அந்தி வேளையில் அடிமைகள் மின்மினிப் பூச்சிகளை விரட்டிப் பிடித்து, தங்கள் எஜமாட்டிகளிடம் கொடுப்பார்கள். அந்தச் சீமாட்டிகள் அவற்றைக் கொண்டு தங்கள் கூந்தலையும் கைகளையும் அலங்கரிப்பார்கள். வளங்கொழிக்கும் சிறு தெய்வங்கள் என்று இந்தியாவில் அப்பூச்சிகள் கருதப்பட்டதும் உண்டு. ஜப்பானில் ஆயிரக் கணக்கான மின்மினிப் பூச்சிகளைப் பிள்ளைகள் சக்கிரவர்த்தியின் அரண்மனைமுன் விடுவார்கள். அது சக்கிரவர்த்தியைக் கௌரவிப்பதாகும்.

பால்டிமோரில் பள்ளிப் பிள்ளைகள் 1848-ம் ஆண்டு முதல் வேனிற் காலங்களில் மின்மினிகளைப் பிடித்து, டாக்டர் வில்லியம் டி. மெக்கல்ராய்க்கு விற்கிறார்கள். மெக்கல்ராய் என்பவர் ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் உயிர் நூல் பேராசிரியர்; மெக்காலம்-பிராட் நிலையம் என்னும் உயிர்நூல் ஆராய்ச்சி ஸ்தாபனத்தின் தலைவராகவும் அவர் இருக்கிறார். அசாதாரணமான பூச்சிகளைப்பற்றி அவர் ஆராய்ச்சி நடத்தி வருகிறார். அதற்காகச் சென்ற பத்தாண்டுகளில் அவர் இலட்சக் கணக்கான மின்மினிப் பூச்சிகளை விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்.

சென்ற ஆண்டில் மட்டும் பிள்ளைகள் 4 இலட்சம் மின்மினிப் பூச்சிகளைப் பிடித்து அவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டில் அவருக்கு இன்னும் அதிகமாக வேண்டும். அவருக்கு உயிருள்ள பூச்சிகளே வேண்டும்.

மின்மினிப் பூச்சியின் வால் ஏன் ஒளி வீசுகிறது? அதற்கு எவ்வாறு ஒளி உண்டாகிறது? இவற்றை அறிய விஞ்ஞானிகள்

யமைச்சர் திருவாளர் சுப்ரமண்யம் அவர்களும், கல்வித் துறை இயக்குநர் திருவாளர் சுந்தரவடிவேலு அவர்களும் அமைதியாக இருந்து படித்துப் பார்த்து, தனியார் பள்ளிக்கூடங்களுக்குப்போதுமான அளவு உதவியை உடனடியாக அளிக்க முன்வரவேண்டும் என்பதே நம்முடைய வேண்டுகோள்.

விரும்புகிறார்கள். டாக்டர் மெக்கல்ராய் பல ஆண்டுகளாக இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

முதலில் அவர் பல்லாயிரக் கணக்கான மின்மினிப் பூச்சிகளின் வால்களைப் பிய்த்தெடுத்து, அவற்றை ஒரு பெரிய உரலில் போட்டு உலக்கை கொண்டு பொடியாக்கினார்.

மிகவும் வருந்தி அவர் பல சோதனைகள் செய்து பார்த்து, மின் மினிப் பூச்சியில் லூசிபெரின், லூசிபெரேஸ் என்னும் இரண்டு ரசாயனப் பொருள்கள் இருப்பதைக் கண்டு பிடித்தார். அவற்றைப் பிரித்தெடுத்துப் பின்னர் கலந்தால், அவை ஒளி உண்டாக்குகின்றன.

மின்மினிப் பூச்சியின் வாலில் வேறு ரசாயனப் பொருள்களும் இருக்கக்கூடும் என்று கருதி டாக்டர் மெக்கல்ராய் மீண்டும் ஆராய்ச்சி நடத்தி, அடினூசின் டிரை பாஸ்பேட்டும் பிராணவாயுவும் மாங்கினிஸியமும் உள்ளன என்று கண்டு பிடித்தார். இராசயனப் பொருள்களைத் தனித் தனியே பிரித்து, பின்னர் அவற்றை வெவ் வேறு அளவுகளிலும் வெவ்வேறு வகையாகவும் சேர்த்துச் சோதனை செய்து பார்த்து, "ஏடிபி" எனப்படும் அடினூசின் டிரைபாஸ்பேட் மிக முக்கியமானதாக இருக்கக் கண்டார்.

மின்மினிப் பூச்சியின் நரம்பினின்று ஏற்படும் ஓர் உணர்ச்சி யால் இரசாயனப் பொருள்கள் பிரிந்து விடுகின்றன என்றும், அத னால் அதன் வால் ஒளி வீசுகின்றது என்றும் அவர் கண்டுபிடித்தார். மீண்டும் ஓர் நரம்பு உணர்ச்சியால் பிரிந்தவை இணைவதால், ஒளி மறைந்து விடுகிறது என்பதும் அவருக்குத் தெரியலாயிற்று.

விஞ்ஞானிகள் விஷயங்களை அறிந்து, அந்த அறிவால் இன்புற மட்டும் விரும்புவதில்லை; அவர்கள் அந்த அறிவைப் பயன்படுத்தவும் விரும்புகிறார். எனவே, டாக்டர் மெக்கல்ராயும் தாம் பெற்ற அறிவைப் பயன்படுத்த விரும்புகிறார். நம் உடலிலுள்ள சக்தி நாம் வேண்டும்போது எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை மின்மினிப் பூச்சி ஆராய்ச்சியால் அவர் அறிந்துகொண்டார்.

ஏடிபி என்னும் இரசாயன சக்தி எவ்வாறு மனித உடலில் பல்வேறு சக்திகளாக மாறுகிறது என்பதையும், எவ்வாறு அது மனித உடலில் பாய்கிறது என்பதையும் அறிய விஞ்ஞானிகள் இப் பொழுது முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

பால்டிமோரில் மின்மினிப் பூச்சிகளைப் பிடித்துக் கொடுக்கும் சிறுவரும், அப்படிச் செய்வதன்மூலம் இந்த ஆராய்ச்சிக்குத் துணை செய்கின்றவர்கள் ஆகின்றனர்.

ஏழிசை கலந்தது!

[இரா. செழியன், எம். ஏ.]

ஏழிசை மன்னர் இறந்துவிட்டார்! இசையுலகச் சுடர் அணைந்துவிட்டது! வெள்ளித் திரையில் பதினைந்து ஆண்டுகளுக்குமேல் ஈடு இணையற்ற வேந்தனாய், புன்னகை ஒளி வீசி, இன்னிசைக் கீதம்பாடி, புகழின் உச்சியில் உலவிவந்த பெரியோன், அயர்ந்து, சோர்ந்து, கடைசியாக அடங்கிவிட்டான்! தன் இசை வெள்ளத்தால் தமிழ் மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய அவர், இன்று கால வெள்ளத்தில் அமிழ்ந்துவிட்டார்!

இனிய குரல் அடங்கிவிட்டது. இசைத் தென்றல் நின்றுவிட்டது. புன்னகை பொதிந்த தோற்றம் மறைந்துவிட்டது!

தமிழகத்தின் திரைவானில் ஒளிவிட்ட ஒரு பெருநட்சத்திரம் உதிர்ந்துவிட்டது! ஒளி வீசிய திரையில், நீண்ட நிழல் மட்டும் தான் மிகுந்திருக்கிறது!

தனது இசையால்—இசையில் தவழ்ந்து வரும் இனிமையால்—அந்த இனிமையில் வழிந்துவரும் எளிமையால்—**ஏழிசை மன்னர் எம். கே. தியாகராஜ பாகவதர்** தமிழ் மக்களின் உள்ளத்தில் நிலையான ஓர் இடத்தைப் பெற்றார்! பாகவதரின் இசை, கேட்டோரை மகிழ வைத்தது, அத்துடன் கேட்டோரைப் பாடவும் வைத்தது! முதன் முறையாக இசையுடன் இனிமையைச் சேர்த்துக் காட்டினார். அந்த இனிமையை எளிமையான முறையில் காட்டினார்! பாகவதரின் பாட்டைக் கேட்டோர், தாமும் அதைப்போலப் பாடலாம் என்று எண்ணினர், பாடினர்! வீதிகளில், வேலை செய்யும் இடங்களில், சாலையோரங்களில், ஒற்றையடிப் பாதைகளில், பாகவதரின் பாட்டுகள் எங்கும் இசைத்தபடி இருந்தன!

பாகவதர் அவர்கள் நடித்த படங்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவே உடையன! ஆனால் மற்றவர்கள் நூறு படங்களில் சேர்க்கக் கூடிய புகழை ஒரு பத்துப் படங்களில் இவர் சேர்த்துவிட்டார் எனலாம்! அவருடைய ஒவ்வொரு படமும், மக்களால் மறக்க முடியாதபடி புதிய இசையமிழ்தை வழங்கிச் சென்றது!

"உன்னழகைக் காண இரு கண்கள் போதாதே!" என்று பாகவதர் பாடினால், அந்தப் பாட்டைக் கேட்டோர் "உன் இசையைக் கேட்க இரு காதுகள் போதாதே!" என்றுதான் கூற வேண்டியிருக்கிறது.

"சந்திர சூரியர் போல் கதிர் மாறினும் வீழினும் நமக்கென்ன? இந்த இன்பமே சொந்த மாதலால்..." என அம்பிகாபதிக்காக

அவர் பாடினார். அம்பிகாபதியின் பாடலில் அமராவதி மயங்கியதை விட, பாகவதரின் பாடலில் மக்கள் மயங்கி நின்றனர். "பாகவதரின் இசையைக் கேட்கும் இன்பம் மட்டும் சொந்தமானால் போதும், சந்திர சூரியர் போல் கதிர் மாறினும் வீழினும் நமக்கென்ன..." என்று அவர்களுக்குப் பட்டது.

"கண்ணை இழந்தவன் நீயோ நானோ..." என்று அவர் பாட்டைக் கேட்கும்பொழுது, கண்ணை இழந்தால்கூடப் பாதகமில்லை, இவ்வளவு இனிய இசையைக் கேட்க முடியாதபடி காதுகள் போனால்தான் பெரிய நஷ்டம் எனத் தோன்றும்! அவரின் பாட்டைக் கேட்கும்பொழுது "பாகவதரின் பாட்டைக் கேட்க வேண்டும், வேறென்ன வேண்டும்!" என்றுதான் தோன்றும்! சராசரங்கள் சுழன்று வருவதைப்போல, அவரது இசையால் ஈர்க்கப்பட்டு, மக்கள் உள்ளமெல்லாம் அவரது பாட்டின் பின் சுழன்று சுழன்று சென்றன!

இனிமையும் எளிமையும் கலந்த இசையை, இவரைப்போல் வாரி வழங்கியவர்கள் வேறு யாருமில்லை! பாட்டுப் பாடுபவர்களுக்கெல்லாம் "பாகவதர்" என்ற பெயர் தரப் படுவதுண்டு. ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரை, பாகவதர் என்றால், அது எம். கே. தியாகராஜ பாகவதர் ஒருவரைத்தான் குறித்தது! அந்த அளவு இசையின் இனிமையாலும், எளிமையாலும், ஆழ்ந்த உணர்ச்சி வயத்தாலும், தமிழ் மக்களின் உள்ளத்தில் தனியிடத்தை அவர் தேடிக்கொண்டார்!

அவர் பாட்டுக்களில் இசை பொங்கியது, இனிமை தவழ்ந்தது! காதல் கனிந்தது, கனிவு மலர்ந்தது! மகிழ்ச்சி மிஞ்சியது, உணர்ச்சி கொஞ்சியது! வீரம் துளிர்த்தது, சோகம் கப்பியது! அவரின் பாடல்கள் ஒவ்வொரு வகை உணர்ச்சிக்கும் வித்திட்டு நின்றது. இத்தகு இசை வல்லாரை நாம் இழந்தோம்.

கலைத் துறையில் புகழ்மிக்க ஒரு தலைமுறை மறைந்துகொண்டிருப்பது போலத் தோன்றுகிறது! கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மறைந்தார்; இசையுலக மேதை டி. என். இராஜரத்தினம் மறைந்தார்; இப்பொழுது ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதரும் மறைந்துவிட்டார்! இசையுலகிலும் திரையுலகிலும் புகழ் பெற்று விளங்கிய அரும் பெருஞ் செல்வங்கள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டுப் போயின!

திரைப்படவுலகில் முன்னணியில் நின்று வேறெவரும் அடைந்திராத அளவு புகழ் பெற்று விளங்கினாரெனினும், பாகவதர் அவர்கள் தமது சொந்த வாழ்வை வளமான வகையில் அமைத்துச் செல்லவில்லை. கலைத் துறையின் முன்னணியில் உள்ளவர்கள் பாகவதர் அவர்களையும் தமது கலைக் குடும்பத்தின் முதல்வர்களில் ஒருவராக எண்ணி, தக்க வகை

யில் பாதுகாப்புத் தருவார்கள் என எதிர்பார்க்கலாம்.

யாழின் நரம்புகள் அறுந்து விட்டன; ஆனால் அது எழுப்பிய இசை எதிரொலித்தபடி இருக்கிறது. பாகவதர் மறைந்துவிட்டார்; ஆனால் அவருடைய பாட்டுக்கள் நமது காதில் கேட்டபடி இருக்கின்றன!

— "மன்றம்"

ஆசிரியருக்குக் கடிதம்

அரசாங்கப் பாட புத்தகப் பிரசுரம்

ஐயா,

சென்னை ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தமிழ்ப் பேராசிரியர் திரு. சிதம்பரநாதன் பேசுகையில் ஆரம்பப் பள்ளிக் கூடங்களுக்குப் பாட புத்தகங்களை அரசாங்கம் வெளியிடுவதுபற்றி எதிர்ப்பு தெரிவித்துள்ளதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். இவ்வாண்டு எட்டாம் வகுப்பிற்கான தமிழ்ப் புத்தகத்தைச் சென்னை அரசாங்கம் வழக்கம்போல் பிரசுரம் செய்துள்ளது. ஆனால் அந்தப் புத்தகத்தில் எழுத்துப் பிழைகள் மலிந்துள்ளன என்பதைக் கவனிக்கும்பொழுது ஒரு புத்தகத்திற்கே இந்தக் கதி என்றால் எல்லாப் பாட புத்தகங்களையும் வெளியிட முனைந்திருக்கும் சென்னை அரசாங்கம் கண்டிப்பாக யோசனை செய்யுத்தான் வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் அரசாங்கம் பிரசுரித்துள்ள எட்டாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகத்தில் "பேறிவாளன்" என்பது "பேறுவாணன்" எனவும், "பிறப்பொக்கும்" என்பது "பிறப்பாருக்கும்" என்றும், "1920-1921-க்கு மிடையில்" என்பது "1920-1920-க்கு மிடையில்" என்றும், "சௌரமதம்" என்பது "கௌரவமதம்" என்றும், இது போன்று பல அச்சுப் பிழைகள் மலிந்துள்ளன.

மேலும் தனிப்பட்டோர் வெளியிடும் பாடப் புத்தகங்களுடன் அரசாங்கமும் அதே பாடப் புத்தகங்களை வெளியிட்டு, எந்த அளவிற்கு வரவேற்பு இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள முன்வர வேண்டும்.

சென்னை
6-11-59

அன்புள்ள,
வி. ஏ. இளங்கண்ணன்.

தந்திப் போக்குவரத்தில் விந்தைக் கருவிகள்

நியூயார்க் நகரில் ஓர் அலுவலகம். அங்கு ஒரு மூலையில் ஒரு கருவி. தூரத்திலிருந்து வரும் தந்திகள் அதில் தாமே பதிவாகின்றன. அங்கிருந்து அதன் வழியாகத் தந்தி அனுப்பவும் செய்யலாம். அலுவலர் ஜான் புல்லக் தந்தி அடிக்கும் ஓசை கேட்டு என்ன என்று எழுந்து போய்ப் பார்க்கிறார். மூவாயிரம் மைலுக்கு மேற்கே சான்பிரான்சிஸ்கோ நகரிலுள்ள ஒருவர் தமக்கு நியூயார்க் பங்கு மார்க்கெட்டில் "டிராபிக்கல் ஆயில் கம்பெனியின் பங்குகளாக 400 பங்குகள் வாங்கும்படி" செய்தி அனுப்புகிறார். உடனே புல்லக் தமது மேசை அருகே வந்தார்; தொலைபேசியை எடுத்து பங்கு மார்க்கெட்டுக்குப் பேசினார்; பங்குகளை வாங்கினார். அதை உடனே ஒரு குறிப்பேட்டில் குறித்துக்கொண்டார். பங்கு வாங்கியாயிற்று என்று சுருக்கமாக சான்பிரான்சிஸ்கோ நண்பருக்கு அதே கருவியில் தந்தி கொடுத்தார். இவ்வளவும் ஏழு நிமிஷ நேரத்திற்குள் முடிந்து விட்டது!

தொலை அச்சு (டெலிபிரின்டர்) என்னும் கருவி வைத்துள்ள ஒவ்வொரு அமெரிக்க வணிக நிலையத்துக்கும் இவ்வாறு தந்திகள் மிக விரைவாகவும் நேரடியாகவும் கிடைக்கின்றன.

தானே இயங்கும் பலவகைச் செய்திப் போக்குவரத்துக் கருவிகளுக்குத் தொலை அச்சு ஓர் எடுத்துக்காட்டாகும். "வெஸ்டர்ன் யூனியன் டெலிகிராப் கம்பெனி" இரண்டாவது உலகப் போர் ஓய்ந்தது முதல் இவ்வகைக் கருவிகளை வாங்கி வைப்பதற்காக 16 கோடி டாலர் செலவழித்துள்ளது.

வானொலி மூலம் தந்தி அனுப்பும் முறையையும் இக் கம்பெனி தொடங்கியுள்ளது. தற்சமயம் நியூயார்க், சிக்காகோ, அட்லாண்டா என்னும் மூன்று நகரங்களுக்கிடையிலும் இக் கம்பெனி அனுப்பும் தந்திகளெல்லாம் வானொலி மூலம் செல்பவையே. இனி இத்திட்டத்தில் அமெரிக்க நகரங்கள் எல்லாவற்றையும் இணைக்க அக் கம்பெனி எண்ணியுள்ளது.

கம்பெனி "மேசைப் படம்" என்னும் இன்னொரு கருவியையும் கண்டு பிடித்திருக்கிறது. இதுவும் தொலை அச்சு முறை போன்றதே. ஆனால், இதன் வழியாகப் படங்களையும் அனுப்பலாம். எழுதிய

எழுத்துக்கள் அதே வடிவத்தில் அப்பா லுள்ளவருக்குக் கிடைக்கும். தந்தி கொடுப்பவர் தாம் சொல்ல விரும்புவதைத் தட்டெழுத்திலாவது தமது கையெழுத்திலாவது வரைவார்; தந்தி எழுதிய தாளை மேசைப் படக் கருவியில் வைப்பார்; தாள் ஓர் உருளையில் சுழலும்; சுழல்கையில், கருவியிலுள்ள ஒரு மின்சாரக் "கண்" அச் செய்தியைப் "பார்வையிடும்"; பார்வையிட்டு, தந்திக் கம்பிகள் வழியாகவேனும், வானொலி வழியாகவேனும் சேரவேண்டிய இடத்துக்கு அனுப்பும். சேரும் இடத்திலும் இதே போன்ற மேசைப் படக் கருவி ஒன்று இருக்கும். அதிலுள்ள உருளை மீது ஒரு தாள் சுற்றியிருக்கும். அது மின்சார அலைகளைப் பதிவு செய்யக் கூடிய தாள். வரும் தந்தி இதில் அப்படியே பதிவாகிவிடும்.

அலுவலகக் கணக்குகள், குழூஉக் குறிகள், புள்ளி விவரங்கள் முதலியவற்றை அனுப்புவதற்கு மேசைப்படக் கருவி மிக்க துணையாகும். அமெரிக்காவில் 36,000 கம்பெனிகள் வெஸ்டர்ன் யூனியனின் இக் கருவிகளால் பயன்பெறுகின்றன.

வெஸ்டர்ன் யூனியன் கம்பெனி தனது தந்தி வசதிகளை அரசாங்கத்துக்கும், இருப்புப் பாதைக் கம்பெனிகள், விமானப் போக்குவரத்துக் கம்பெனிகள் முதலிய பல பெரிய கம்பெனிகளுக்கும் அதனதன் தனிப்பட்ட உபயோகத்துக்காக வாடகைக்கு விடுகிறது.

இல்வாறெல்லாம் புதுப் புதுக் கருவிகளாலும், புதுப் புது ஏற்பாடுகளாலும் தந்திப் போக்குவரத்து நேரம் மிக மிகக் குறைந்துவிட்டது. சராசரியாகப் பார்த்தால், 10 ஆண்டுகளுக்கு முன்பு அரை மணி நேரம் எடுத்த தந்தி இன்று 7 நிமிஷத்தில் போய்ச் சேர்ந்துவிடுகிறது.

அமெரிக்காவில் அனுப்பப்படும் தந்திகளில் நூற்றுக்கு 95 பங்கு தானே இயங்கும் கருவிகளால் அவ்வவற்றின் விலாசதார்களுக்கு நேரே போய்ச் சேர்வனவே.

ஆதாரப்பள்ளிகளில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு வேலை இல்லை

ஆதாரப் பயிற்சி பெறுதவர்களின் அவல நிலை

கல்வி இலாகா இதுபற்றிக் கவனம் செலுத்தவேண்டும்

தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியப் பேரவைப் பொதுச் செயலாளர்

திரு. எஸ். வில்லியம்ராஜ் வேண்டுகோள்

இன்று தமிழ்நாட்டிலே ஓர் புதிய நெருக்கடி. ஆரம்ப ஆசிரியர்கள் ஆயிரக் கணக்கானவர்கள் ஆதாரக் கல்வி புகுத்தப்பட்ட பள்ளிகளிலே பணி புரிய இடமில்லை. காரணம், அவர்கள் ஆதாரப் பயிற்சி பெறுதவர்கள் என்பது. இரண்டு ஆண்டு அரசினர் பயிற்சி பெற்று சர்டிபிகேட் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கிறது நிர்வாகம். காரணம், ஆதாரப் பயிற்சி பெறுதவர்களை நியமித்தால் கல்வி இலாகாவிடம் விதிவிலக்குப் பெறவேண்டும், அவர்கள் விதிவிலக்குத் தர மறுக்கிறுர்கள் என்று கூறுகிறுர்கள் நிர்வாகிகள். அப்படியானுல் இரண்டாண்டு ஆசிரியப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் லாயக்கற்றவர்கள் என்பதுதானே அர்த்தம்?

ஆதாரப் பள்ளிகளில் ஆதாரப் பயிற்சி பெறுதவர்களை நியமிக்க விதிவிலக்கு, கல்வி இலாகாவிடம் கோரும்பொழுது அவர்கள், வேலை தேடித் தரும் அலுவலகத்திற்கு ஆதாரப் பயிற்சி ஆசிரியர்கள் தேவையை கேட்கப்பட்டதா? பத்திரிகை மூலம் விளம்பரம் கொடுக்கப்பட்டதா? என வினு எழுப்புகிறுர்கள். இந்த இரு முறைகளையும் கையாளும்பொழுது ஆதாரப் பயிற்சி ஆசிரியர்கள் நிச்சயம் கிடைப்பார்கள். அப்படியானுல் ஆதாரப் பயிற்சி பெறுத ஏழை ஆசிரியர்களின் நிலை என்ன? எங்கும் வேலை இல்லை என்ற பல்லவிதான்.

ஆதார மறு பயிற்சிக்கு ஆசிரியர்களை அனுப்புவது கல்வி இலாகா. ஆதாரப் பள்ளியில் ஆதாரக் கல்வி புகுத்தப்படுவதற்குமுன் தொடர்ந்து பணியாற்றியவர்களை ஆதார மறு பயிற்சிக்குத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறுர்கள். அப்படியானுல் ஏனையவர்கள் கதி என்ன? வேலை கிடைத்தால்தானே அவர்கள் மறு பயிற்சிக்குச் செல்ல முடியும்? வேலையே கொடுக்க மறுக்கிறதே நிர்வாகம். மறு பயிற்சிக்குச் செல்ல விரும்புபவர்கள் ஆதாரப் பள்ளிகளில் பணி ஆற்றினுலும் சரி, அல்லது வேறு ஆசிரியர்களாக இருந்தாலும் சரி அவர்கள் மறு

பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் அனைவரும் மறு பயிற்சி பெற வசதி இருக்கிறது. அப்படி ஆதாரப் பள்ளியில் பணி புரி வோரை மட்டும் மறு பயிற்சிக்கு எடுத்துக்கொண்டால் ஏனையோர் எங்ஙனம் ஆதார மறு பயிற்சி பெற முடியும்?

இன்று எங்கும் ஆதாரக் கல்வி புகுத்தப்பட்டுள்ளது. அப்படி யானல் ஆதாரப் பயிற்சி பெருத எண்ணற்ற ஆசிரியர்களின் நிலை என்ன? வேலை இல்லாத் திண்டாட்டம்தானே?

விதிவிலக்குத் தருவதில் சில மாவட்டக் கல்வி அதிகாரிகள் கடுமையாக இருக்கிருர்கள். நியமனம் செய்து விதிவிலக்கு கேட்கப் பட்டால் சில மாதங்களுக்குப் பிறகு அவர்களை நீக்கிவிடும்படி உத்தர விடுகிருர்கள். இந்நிலை நியாயமா?

ஆதாரப் பள்ளிகளில் தற்சமயம் பணிபுரியும் ஆயிரக் கணக் கான பயிற்சி பெருத ஆசிரியர்கள் நல்ல முறையில் ஆதாரக் கல்வி போதனையை நடத்துகிருர்கள். அப்படியிருக்க ஆதாரப் பயிற்சி பெருதவர்களுக்கு ஆதாரப் பள்ளிகளில் நியமனம் மறுப்பது நியாயமா?

ஆதாரக் கல்வி புகுத்தப்படாத பள்ளிகளில் ஆதாரப் பயிற்சி ஆசிரியர் பணி புரியத் தடையில்லை. அவர்களுக்கு விதிவிலக்குத் தேவையில்லை. ஆனல் ஆதாரப் பள்ளிகளில் மட்டும் ஆதாரப் பயிற்சி பெருதவர்களுக்கு விதிவிலக்கு கேட்கப்படுகிறது. இது சரியான நீதியல்லவே. ஜனநாயக நாட்டிலே இதுபோன்று இருக்கலாமா?

எனவே, கல்வி இலாகா எப்பள்ளியிலும் ஆதாரப் பயிற்சி பெற்றவரும், பெருதவரும் பணி புரிய அனுமதி வழங்கவேண்டும். விதிவிலக்குத் தருவதில் சில மாவட்டக் கல்வி அதிகாரிகள் கை யாளும் கடுமையான நடவடிக்கைகளைத் தளர்த்தும்படி உத்தரவிட வேண்டும். அதுதான் இன்றைய நிலையில் வேலை கிடைக்காது தவிக் கும் ஆயிரக் கணக்கான ஆரம்ப ஆசிரியர்களுக்கு கல்வி இலாகா காட்டும் பேருதவி. அதனை உடனடியாகச் செய்யவேண்டும் என் பதே எனது வேண்டுகோள்.

தமிழகத்தே வதியும் ஆயிரக் கணக்கான ஆரம்ப ஆசிரியர்களின் சார்பிலே கல்வி இலாகா தலைமை நிலையத்திற்கு விடும் வேண்டுகோள். இல்லையானல் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும். எங்கும் பட்டினிப் பட்டாளம்தான் காணப்படும். இந்த அவல நிலை மாறக் கல்வி இலாகா நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

வேண்டாத ஏற்பாடு! வீணான செலவு!!

[மா. இளஞ்செழியன், எம். ஏ.]

கட்டிக் கரும்பனைய கவிதைகள் பலவற்றைத் தந்துள்ள **கவிஞர் இக்பால்** புரட்சிப் புயல் அனைய தம் கவிதை ஒன்றிலே, "பாமர மக்கள் பாராளும் காலம் இது" என்று பூரிப்புடனும் பெருமையுடனும் குறிப்பிட்டுள்ளார். அந்தக் குறிப்பு முற்றிலும் உண்மையானது. உள்ளபடியே இந்தக் காலம், பாமர மக்கள் பாராளும் காலம்; மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்கள் ஆட்சியே சிறந்த ஆட்சி என்னும் கருத்து எல்லாராலும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்படும் காலம்; தனி மனிதன் ஒருவனிடம் நாட்டாட்சிப் பீடம் சிக்கிக் கொண்டிருப்பதை இனி ஒரு கணமும் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம் என்ற வீர முழக்கம் மன்னர் ஆட்சி நிலவும் இடத்தில் எல்லாம் வீறிட்டெழுகின்ற காலம்; இந்தப் பரந்த உலகின் பற்பல பகுதிகளிலும் மன்னர் ஆட்சி மறைந்து, மணி மகுடங்கள் கீழே உருண்டு, தனி மனிதன் தர்பார் தொலைந்து, மக்கள் ஆட்சி மலர்ந்து மணம் வீசும் காலம். இந்தக் காலம் முடியாட்சிக் காலம் அல்ல; குடியாட்சிக் காலம்.

ஆனால் ஒரு காலம் இருந்தது, ஆட்சி என்றாலே அது முடியாட்சிதான் என்று அனைவராலும் எண்ணப்பட்டு வந்த காலம். அந்தக் காலத்திலே மணிமுடி தரித்த மன்னன் நவரத்தினங்கள் இழைக்கப்பட்ட சிங்காதனத்திலே சொகுசாக வீற்றிருப்பான். அவனுடைய மண்டலத்தைப் பொறுத்தவரையிலே, அவன் இட்டதே சட்டம்; நினைத்ததே கட்டளை. அவனே, ஆட்சித் தலைவன்; அவனே சேனையின் முதல்வன்; அவனே சட்டமன்றம்; அவனே வழக்கு மன்றம். அவனுடைய சுட்டுவிரல் அசைந்தால் நாடே அசையும்; நாட்டில் உள்ள மக்கள் எல்லாம் அசைவர். அவன் எள் என்று கேட்கு முன்னே எண்ணெயாக வந்து நிற்பர் மக்கள். அவன் நெல் என்று சொல்லு முன்னே அரிசியையே கொண்டுவந்து கொட்டி விடுவர். மன்னன் வெறும் மனிதன் அல்லன்—மஹேஸ்வரனின் தூதன்—ஆண்டவனின் அவதாரம் என்னும் எண்ணம் மக்கள் உள்ளத்திலே ஆழப் பதிந்திருந்த காலம் அந்தக் காலம். எனவேதான் அந்தக் காலத்திலே மன்னன் பேச்சுக்கு மறுபேச்சு இல்லாமல் இருந்து வந்தது.

காலம் சிறிது மாறிற்று; சில நூற்றாண்டுகள் கழிந்தன; மன்னவனின் சிங்காதனத்துக்கு இருந்த செல்வாக்கு சற்றே சுருங்கலாயிற்று. ஜமீன் ஜாம்ப

வான்கள், மிட்டா மிராசுதார்கள், நிரம்பப் பணம் படைத்தவர்கள், நீண்ட செல்வாக்கு உடையவர்கள், பிரபுக்கள் சீமான்கள் என்று அழைக்கப்பட்டவர்கள், பாதிரிகள் — புரோகிதர்கள் என்ற காரணத்தால் ஆதிக்கம் பெற்றவர்கள் ஆகிய இன்னோரன்ன ஆதிக்கவாதிகள் நாட்டை ஆளும் பொறுப்பிலே தங்களுக்கும் பங்கிருக்க வேண்டும் என்று மன்னனிடம் போராடத் தொடங்கினார்கள். செல்வாக்கும் செல்வமும் படைத்தவர்கள் அவர்கள்— அவர்கள் சொல்லைத் தட்டி நடந்தால் தனக்கு ஆபத்து நிச்சயம் என்று அஞ்சி நடுங்கினான் மன்னன். எனவே முதல் சட்டசபை பிறந்தது — சீமான்களுக்கும் பூமான்களுக்கும் நாட்டாட்சிப் பீடத்திலே பங்கு கிடைத்தது. சட்டசபை என்கிற அமைப்பு முறை உலகத்தில் முதன் முதலில் உருவாகிய விதம் இதுதான். ஆனால் அந்தக் காலத்தில், சட்டசபைகள், பிரபுக்கள் வீட்டுப் பொன்னாபரணங்களாக இருந்தனவே தவிர, பொது மக்கள் உள்ளத்தை எடுத்துக் காட்டும் எழில் மன்றங்களாக இருக்கவில்லை. மன்னனுக்கும் சரி, மன்னனுடன் போராடித் தங்கட்கோர் சட்ட சபையைத் தேடிக் கொண்ட சீமான்களுக்கும் சரி, மக்கள் என்றோர் கூட்டம் இருக்கிறது என்ற எண்ணமே ஏற்படவில்லை அந்தக் காலத்தில். மக்களுக்கும் நாட்டாட்சிப் பீடத்திலே இடம் இருக்கவேண்டும் என்ற கருத்து, நினைப்பு, சந்தேகம் கூட ஏற்படவில்லை. அந்த இரு சாராராலும் சட்டசபைகள் சீமான்களின் பல சொத்துக்களில் ஒன்றாகவே மதிப்பிடப்பட்டு வந்தன.

காலச்சக்கரம், மேலும் சுழலலாயிற்று. உலக வரலாறு என்னும் புத்தகத்திலே இன்னும் சில ஏடுகள் இணைக்கப்படலாயின. நூற்றாண்டுகள் சில ஓடி மறைந்தன. சட்டசபைகளில் சீமான்கள் மட்டும் கொலு வீற்றிருக்கிறார்களே அது ஏன் என்னும் கேள்வி மக்கள் மன்றத்தில் முதல் முறையாகத் தோன்றலாயிற்று. நாமும் அங்கே நுழைந்தாலென்ன — மக்களிலே துணிச்சல் உள்ளவர்கள் இது போலக் கேட்கத் தொடங்கினார்கள். “நுழைந்தால் என்ன என்று மெதுவாகக் கேட்காதே! நுழைந்தே தீரவேண்டும் என்று வீரமுழக்கம் இடு!”— அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள் பலர் இது போல இடிமுழக்கம் எழுப்பலானார்கள். “வரி கொடுப்பது நாம்! உழைப்பை அள்ளித்தருவது நாம்! சீமான்களும் பூமான்களும் சொகுசாக வாழ்வது நம் வியர்வையால்—கஷ்ட நஷ்டத்தால்! இப்படிப்பட்ட நமக்கா சட்டசபையில் இடம் இல்லை”— வேறு சிலர் இப்படிக் காரண காரிய விளக்கத்தோடு ‘சட்டசபை—எங்கள் பிறப்புரிமை’ என்னும் இலட்சிய கீதத்தை எழுப்பலானார்கள். முதலிலே சீமான்கள், “சாதாரண மக்

களைச் சட்டசபையிலே நுழைய விடுவதா-முடியாது—கூடாது" என்றுதான் அதிகாரவாதம் புரிந்தார்கள். ஆனால் இறுதியில், நிலைமை மிஞ்சிவிட்டது என்பது தெரிந்ததும், பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கு இடம் தர வேண்டியது நியாயம்தான் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால் சாதாரண மக்களின் பிரதிநிதிகளை, சீமான்களும் செல்வப் பூமான்களுமாகிய தங்களுடன், ஒரே சட்ட சபையில், சரிநிகர் சமானமாக வீற்றிருக்க ஒப்புக் கொண்டால், தங்களுடைய தனி அந்தஸ்து கெட்டுவிடும், கவுரவம் குறைந்துவிடும், மதிப்பு மங்கி விடும் என்று எண்ணமிடலானார்கள் சீமான்கள். அந்த எண்ணத்தின் விளைவாகச் சீமான்களாகிய தாங்கள் அமரத் தனியானதோர் இடமும் சபையும், பொதுமக்களின் பிரதிநிதிகளாக வரும் சாமான்யர் உட்கார வேறு ஓர் இடமும் சபையும் அமைப்பது என்ற முடிவுக்கு வந்தார்கள். தாங்கள் மேலான நிலையினர் என்பதைக் காட்ட தங்கள் சபைக்கு மேல்சபை என்ற பெயரையும், பொதுமக்கள் கீழான அந்தஸ்துடையவர்கள் என்பதை விளக்க அவர்கள் மன்றத்திற்குக் கீழ் சபை என்ற பெயரையும் சூட்டினார்கள். சட்ட சபைகளிலே மேல்சபை — கீழ் சபை என்கிற இருசபைகள் ஏற்பட்ட முறை இதுதான் !

இந்த முறை முதன் முதலில் உருவாகிய காலத்தில், ஆட்சிப் பீடத்தின் முக்கிய அதிகாரங்கள் அத்தனையும் சீமான்களின் சபையாகிய மேல் சபையிடம் தான் விடப்பட்டன. அவ்வளவாக முக்கியம் இல்லாத சில சில்லறை அதிகாரங்கள் மட்டும்தான் பொதுமக்கள் சபையாகிய கீழ் சபையிடம் தரப்பட்டன. ஆனால் காலம் செல்லச் செல்ல, மக்கள் மன்றத்தின் குரல் வலுக்க வலுக்க, சீமான்களின் செல்வாக்கு சிதைந்து பாமரர்களின் ஆதிக்கம் வளர வளர, மேல்சபையின் அதிகாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, கீழ் சபையின் அதிகாரங்கள் சிறிது சிறிதாக வளர்ந்து, இறுதியில், மேல்சபைகள் வெறும் பெயரளவுக்கு உள்ள அதிகாரங்களை மட்டுமே உடையனவாகவும், கீழ் சபைகளே எல்லா அதிகாரங்களின் உறைவிடங்களாகவும் உருமாறிவிட்டன.

எனவே இன்றைய நிலையில் கீழ்சபைகள்தான் உண்மையான சட்டசபைகள். மேல்சபைகள் என்பன வெறும் அலங்காரப் பதுமைகள்தான். என்றாலும் கூட, மேல்சபை என்கிற ஓர் அமைப்பு இன்னமும் உயிருடன் இருப்பதும், அந்த அமைப்புக்கு மேல்சபை என்கிற பெயரும் நிலையும் இருப்பதும், சீமான்களின் செல்வாக்கை மறைமுகமாக நிலைநாட்டும் தவறான செய்கைக்கே முற்றிலும் பயன்படுகின்றன.

மேல்சபைகள் என்பன, பழமையின் சின்னங்கள்; தேவையில்லாத உருவங்கள்; அழிக்கப்

பட வேண்டிய அமைப்பு முறைகள்.

சமுதாயத்தில் பிராமணன் என்றொரு மேல்ஜாதி இருப்பதைப் போல, பொருள்துறையில் முதலாளி என்றொரு உயர் வகுப்பு இருப்பதைப்போல, அரசியலில் மன்னன் என்றொரு பிரத்யேக ஜாதி இருப்பதைப் போல, ஆட்சித் துறையில் அமைந்துள்ள மேல் ஜாதிச் சின்னங்கள்தான் மேல்சபைகள் என்னும் பெயர் படைத்துள்ள அமைப்புகள்.

ஆகவேதான் இந்திய தேசிய காங்கிரசின் பிரதிநிதிகளால் உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் திட்டத்தில் மேல்சபைகள் என்னும் அமைப்புமுறை இருக்காது என்று பலரும் எதிர்பார்த்தார்கள்.

அவர்கள் எதிர் பார்த்தபடியே அஸ்ஸாம்—ஒரிசா—மத்திய பிரதேஷ் ஆகிய மூன்று மாகாணங்களில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு சபைதான் உண்டு—மேல்சபை கிடையாது. ஆனால், பீகார்–பம்பாய்-சென்னை—பஞ்சாப்—உத்திர பிரதேஷ் மேற்கு வங்காளம் ஆகிய மற்ற எல்லா மாகாணங்களிலும் மாகாணத்திற்கு ஒவ்வொரு மேல் சபை உண்டு. டில்லி பாராளுமன்றத்திலும் மேல் சபை உண்டு.

இந்திய அரசியல் திட்டப்படி மாகாணங்களில் இருக்க வேண்டிய மேல் சபைகளும், டில்லியில் உள்ள பாராளுமன்றத்தின் மேல் சபையும், தங்கள் உறுப்பினர்களை எவ்வண்ணம் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன என்பதைப் பார்ப்போம்.

மாகாணங்களில் உள்ள மேல் சபைகளைப் பொறுத்தவரை அவற்றின் மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர், மாவட்ட ஆட்சி மன்றங்கள்—நகராட்சி மன்றங்கள் முதலியவற்றால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுவர். பன்னிரண்டில் ஒரு பகுதியினர், குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகப் பட்டம் வாங்கியுள்ள பட்டதாரிகளால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுவர். பன்னிரண்டில் ஒரு பகுதியினர், செகண்டிரி பள்ளிகளிலும் அதற்கு மேற்பட்ட நிலையில் உள்ள கல்வி நிலையங்களிலும் குறைந்தது மூன்று ஆண்டுகளாக ஆசிரியர்களாக உள்ளவர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்றில் ஒரு பகுதியினர் கீழ் சபையால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படுவார்கள். ஆனால் கீழ் சபையின் உறுப்பினர்களாக இல்லாதவர்களாக அமர்ந்திருப்பர். இப்படியெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தானங்கள் போக மிச்சமுள்ள உறுப்பினர் ஸ்தானங்களுக்கு, கவர்னர், தகுந்த தோழர்களை நியமனம் செய்வார்.

இது, மாகாணங்களில் உள்ள மேல் சபைகள் உருவாகும் முறை.

இனி, டில்லியில் உள்ள மேல் சபை எப்படி உருவாகிறது என்பதைப் பார்ப்போம்.

டில்லி மேல் சபையின் மொத்த உறுப்பினர்களில் பன்னிருவர், குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவர். ஏனைய எல்லோரும் மாகாணங்களில் உள்ள கீழ்சபைகளால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இது, டில்லி மேல்சபை உருவாகும் விதம்.

டில்லி மேல்சபை, மாகாண மேல் சபைகள், இவை உருவாகும் முறையைச் சற்று கூர்ந்து கவனித்தாலே இந்தச் சபைகள் அரைக்கணமும் அமைந்திருக்கத் தேவையில்லை என்பது தெளிவாகிவிடும்.

டில்லி மேல் சபையில் பன்னிருவர் தவிர மற்ற எல்லா உறுப்பினர்களும் — கவனமாகப் படியுங்கள்—மாகாண **கீழ் சபைகளால்தான்** தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அதுபோலவே, **மாகாண மேல் சபை** உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினரும், அந்தந்த மாகாண **கீழ்சபை**யாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

ஆகவே, எல்லா மேல்சபைகளும் பொதுவாகக் கீழ்சபைகளால் தேர்ந்தெடுக்கப் படுகின்ற பிரதிநிதிகள் அடங்கியனவாகவே அமைந்துள்ளன. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்ற கீழ்சபைகள் இருக்கும் போது, அந்தக் கீழ் சபைகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகள் கொண்ட மேல்சபை ஒன்று தனியாக ஏன் இருத்தல் வேண்டும்? அப்படி இருப்பது வீண் செலவுக்கு வழி வகுக்கும் வேதனைத் திட்டம் அல்லாமல் வேறென்ன? ஆகவேதான் மேல் சபைகள் தேவையில்லை என்று நாம் கருதுகிறோம்.

மாகாண மேல்சபைகளைப் பொறுத்தவரை, அந்த மாகாண கீழ்சபைகளால் அனுப்பப்படும் மூன்றில் ஒரு பகுதி உறுப்பினர் போக, ஏனையோர், பட்டதாரிகள்—உயர்நிலைப்பள்ளி, கல்லூரி இவற்றின் ஆசிரியர்கள்—மாவட்ட ஆட்சி மன்றம், நகராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் ஆகியோரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எதற்காக இந்த மூன்று சாராருக்கு மட்டும் ஏனைய பொது மக்களுக்கெல்லாம் இல்லாத இந்தத் தனிச்சலுகை?

மேல்சபைகள் என்கிற அமைப்பு முறையே தேவையில்லை என்று நாம் அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறுவதற்குரிய மற்றொரு காரணம், இந்தச் சபைகளுக்கு முக்கியமான அதிகாரம் எதுவும் கொடுக்கப்படவில்லை என்பதே ஆகும். கீழ் சபைகளில் நிறைவேற்றப்படும் சட்டங்களை உடனடியாக அமுலுக்கு வருவதிலிருந்து சிறிது காலத்திற்குத் தாமதப்படுத்த முடியும் என்பதைத் தவிர மேல்

சபைகளுக்கு வேறு எந்தவித மான அதிகாரமும் கிடையாது.

இந்தச்சில்லறை அதிகாரம் ஒன்றிற்காகவா மேல் சபை என்கிற தனியானதோர் அமைப்பு உயிர் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டும்? வேண்டாம் வேண்டாம் என்றே எவரும் கூறுவர்.

மேல்சபைகள் அமைந்திருப்பதால் மத்திய ஆட்சியாளருக்கும் மாகாண ஆட்சியாளருக்கும் ஏற்படும் செலவும் ஏராளம். இந்த சபைகளுக்கான தேர்தல்கள் நடத்துவது—இவற்றின் தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள் ஆகியோருக்கு மாத ஊதியம், பிரயாணப்படி முதலியன தருவது—இந்த சபைகள் அமைந்திருப்பதற்கேற்ற கட்டிடங்கள் அமைப்பது—இவற்றின் நடைமுறைக்கான செயல்மனை நிறுவி, அதிகாரிகள் வைப்பது ஆகிய பல காரணங்களால் ஏழை நாடாகிய இந்திய நாட்டுக்கு இப்போது கோடிக்கணக்கான ரூபாய் செலவு ஏற்படுகிறது. தேவையில்லாத இந்த மேல்சபைகளை உடனடியாக மூடுவதன் மூலம் அவசியமில்லாத இந்த வீண் செலவுகளை மிச்சமாக்கி, அந்தத் தொகையைப் பண்பும் பயனுமுள்ள வேறு துறைகள் எவற்றிற்கேனும் பயன்படுத்தலாம்.

சீமான்களின் செல்வாக்கை எடுத்துக்காட்டும் பழங்காலச் சின்னங்கள், மேல்சபைகள்.

மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணான அடிப்படையில் எழுப்பப் பட்டிருக்கும் அமைப்பு முறைகள், மேல்சபைகள்.

தங்களுக்கென்று எந்தவித அதிகாரமும் அற்ற கோபுரத்துப் பொம்மைகள், மேல்சபைகள்.

ஏழை வட்டாரமாகிய இந்தியாவுக்கு வீணான செலவை அளிக்கும் வேண்டாத ஏற்பாடு, மேல் சபைகள்.

இத்தன்மைத்தாகிய மேல்சபைகளுக்கு இந்திய அரசியல் திட்டம் இன்பமானதோர் இடம் வகுத்துத் தந்திருப்பது உண்மையில் வருந்தத் தக்கதே.

—

அறிவுச் சுடர்

தன் பெயரும் புகழும் அழிந்தாலும் கவலைப்படாமல், கட்டுக் காவலின்றிச் சிந்திக்கவும், சிந்தித்ததைத் தயங்காமல் எடுத்துரைக்கவும் தனக்குச் சுதந்தரம் இருப்பதே முக்கியம் என்று எவன் கருதுகிறானோ அவனே நம் மதிப்புக்கு உரியவன்.

— ஜேம்ஸ் லவல்

சென்ற இதழ் தொடர்ச்சி :

வெண்ணிலா

[தாமரைக் கண்ணன்]

நிலவினிலே......................!

பணமலை	...	ஜமீன்தார்.
மலையழகர்	...	ஆசிரியர்
சோடா	...	வேலைக்காரன்
வெண்ணிலா	...	ஜமீன்தார் மகள் (வயது 12)
வான் மதி	...	வெண்ணிலாவின் தோழி (வயது 11)
வடிவேலன்	...	ஜமீன்தார் மகன் (வயது 13)
மது, பொய்யப்பன்	...	வடிவேலன் நண்பர்கள் (வயது 14)
111, 144	...	போலீஸ்காரர்கள்
சப் – இன்ஸ்பெக்டர்		
முத்து	...	காரோட்டி.

மு த லி யோ ர் .

கதிர் 3

பள்ளியில் வகுப்பறை
பாடம் நடக்கிறது.

(மாணவர்கள் அமர்ந்துள்ளனர். ஆசிரியர் மலையழகர் வகுப்பில் நுழைகின்றார்.)

மாணவர்கள் :—*(எழுந்து)* வணக்கம், அய்யா!

மலையழகர் :—வணக்கம் அமருங்கள். (மாணவர் அமர) இன்றைய பாடம் தமிழ்ச் செய்யுள்தானே? சரி நேற்று நடத்திய 'இன்

னறுங்கனிச் சோலைகள் செய்தல்' என்ற பாடலைத் தெரிந்தவர்கள் கையை உயர்த்துங்கள்!

(வடிவேலன், பொய்யப்பன், மது தவிர்த்து மற்றவர் உயர்த்துகின்றனர்.)

மலையழகர் : திருஞானம்! நீ சொல்...

திருஞானம் :— இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்;
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்;
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்;
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்;
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கெழுத்தறி வித்தல்.

மலையழகர் :—உட்கார்! மது! நீ ஏன் இந்தப் பாடலைப் படித்து வரவில்லை.

மது :—(எழுந்து) நேற்று பாடம் நடந்தபோது நான் வரவில்லை, அய்யா!

மலையழகர் :—வரவில்லையென்றால், வந்த மாணவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது. படிக்கும் பையனுக்குப் படிப்பின்மேல் அக்கறையிருக்க வேண்டும். நீ கெடுவதுமல்லாமல் பொய்யப்பனையும் வடிவேலனையும் வேறு கெடுத்து வருகிறாய்! ஜாக்கிரதை! ஒழுங்காகப் படிப்பவர்களுக்குத்தான் இங்கு இடம் உண்டு!

மது :—நாளைக்குப் படித்துக்கொண்டு வருகிறேன் அய்யா!

மலையழகர் :—உட்கார்! 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்ற அடிகளுக்குப் புதிய பொருள் சொல்கிறேன். எழுதிக் கொள்ளுங்கள்.

(மாணவர்கள் குறிப்புப் புத்தகம் எடுத்துக்கொண்டு, மலையழகர் சொல்லிவர எழுதிக்கொள்கின்றனர்.)

ஒன்றே குலம் :—முதல் முதலில் நீரில் தோன்றிய உயிர் அணு முதல் வளர்ந்து வந்துள்ள இன்றைய மனித சமுதாயம்வரை அடங்கியுள்ள ஊர்வன வாகிய எறும்பு, பரம்பு முதலியனவாகிய மிருகங்களும் ஆகிய எல்லா உயிர் இனங்களும் இந்த உலகில் ஒரே குலத்தைச் சேர்ந்தவை. காலம், இடம்,

சூழ்நிலை, வளர்ச்சி இவற்றால் உருவத் தோற்றங்கள் மாறுபட்டிருந்தாலும் எல்லாம் உயிர் இனமே. அனைத்தும் ஓர்குலமே! ஆகவே உயிர்களிடத்தில் அன்பு செய்தல் வேண்டும்.

ஒருவனே தேவன் :—நீர், நிலம், காற்று, ஆகாயம், பூமி ஆகிய இவை உண்டாவதற்கு யார் மூலகாரணமோ அவனே கடவுள். அந்தக் கடவுள் ஒருவனே. அவனுக்கு உருவம் இல்லை; நிறம் இல்லை. அத்தகைய ஒப்பற்ற தேவனே உலகின் தலைவன்...

ம்... எழுதி ஆயிற்றா...?

மாணவர் :—ஆயிற்று, அய்யா !

ஆசிரியர் :—நாளைக்கு இதைப் படித்துக்கொண்டு வந்துவிடுங்கள். கடந்தவாரம் நடந்த செய்யுள்களை ஒரு தரம் பார்ப்போம். கிருபாகரன்! 'வீழ்ச்சி யுறு தமிழகத்தில்'... என்று துவங்கும் பாட்டை எழுதியவர் யார்?

கிருபாகரன் :—அந்தக் கவிதையை எழுதியவர் புதுவைக் கவிஞர் பாரதிதாசன் அய்யா.

மலையழகர் :—வான்மதி! அந்தக் கவிதை தெரியுமா?

வான்மதி :—(எழுந்து) தெரியும் அய்யா!

("வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்! விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்! சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமை தன்னைத், தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூளாக்கும்; காழ்ச்சிந்தை மறச் செயல்கள் மிகவும் வேண்டும்! கடல் போலும் செந்தமிழைப் பெருக்க வேண்டும்! கீழ்ச் செயல்கள் விடவேண்டும்......

(கவிதை முடியும் முன்பு மதுவும் பொய்யப்பனும் ஒருவருடன் ஒருவர் பேசி ஊறு விளைவிக்கின்றனர்.)

மலையழகர் :—டேய் அமாவாசைகளா! நீங்க வருவதே மாதத்திற்கு ஒரு தடவை. அந்த ஒரு தடவையும் தொந்தரவு கொடுக்காமல் இருக்கக்கூடாது ?

மது :—(எழுந்து) இவன் என் பேனாவை எடுத்துக்கொண்டு கொடுக்க மாட்டேனென்கிறான் அய்யா!

பொய்யப்பன் :—அவன் பொய் சொல்கிறான் அய்யா! அவன் தான் முதலில் என் பேனாவை எடுத்துக்கொண்டு கேட்டால் அடிக்கிறான்!

மலையழகர் :—இரண்டு பேரும் நில்லுங்கள். வடிவேலா! 'இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்...' என்ற கவிதை தெரியுமா?

வடிவேலன் :—தெரியாது, அய்யா!

மலையழகர் :—நீ வரவர ரொம்பவும் மோசமாகி வருகிறாய். இனி மேலாவது கவனத்துடன் படித்தால்தான் மேல் வகுப்புக்குப் போக முடியும். கவனத்தில் வைத்துக்கொள்! வான்மதி! நீ உட்காரம்மா. வெண்ணிலா! பாரதிதாசன் தமிழின் பெருமையை எப்படி வர்ணிக்கிறார்? கவிதையாகவே சொல்லு.

வெண்ணிலா :—(எழுந்து)

கனியிடை ஏறிய சுளையும்—முற்றல்
கழை யிடை ஏறிய சாறும்,

பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சும்
பாகிடை ஏறிய சுவையும்,

நனி பசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்,

இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

(மணி அடிக்கிறது)

மலையழகர் :—அனைவரும் புத்தகங்களை எடுத்துக் கொண்டு, ஒழுங்காகச் செல்லுங்கள்!

மாணவர்கள் :—(எழுந்து நின்று) வணக்கம், அய்யா!

மலையழகர் :—வணக்கம்!

(கலைகின்றனர்.)

— திரை —

கதிர் 4

பணமலையின் வீடு
மாலை மணி நான்கு.

(பணமலை நடந்து கொண்டிருக்க, சோடா வும் நடந்து கொண்டே அவருக்கு விசிறு கிறான்.)

பணமலை :—*சோடா!*

சோடா :—*என்னங்க?*

பணமலை :—*விசுறுடா, அதுக்குள்ளே நிறுத்திட்டான் டேய்! என்னுடைய நாற்பது வருஷ அனுபவத்தில் சொல்றேன், உலகத்திலே பொய்யும் பொறுமையும் அடுத்துக் கெடுக்கிற வஞ்சக வழக்கமும்......*

சோடா :—*நிறைய இருக்குதுங்க...!*

பணமலை :—*சீ கழுத!! பெரிய உண்மையைக் கண்டு பிடிச்சுட் டயோ! ஏண்டா ...... அந்த மாதிரி பொய்யும் பொறுமையும் இல்லாம ஒழுங்கா வாழறவனுங்க......*

சோடா :—*என்னைப் போல தரித்திர நாராயணனு இருப்பானுங்க*

பணமலை :—*அப்போ, பணக்காரனுங்களுக்கு அதெல்லாம் உடம்பி லேயே ஊறினதுன்னு சொல்லு.*

சோடா :—*ஆமாங்க*

பணமலை :—*(கோபமாக) என்ன...?*

சோடா :—*இல்லீங்க......*

பணமலை :—*நான்கூட நினைச்சுப் பார்த்தேன். அது தப்புடா! அவனவன் செய்த பாவ புண்ணியம்டா.*

சோடா :—*ஏழையாக இருக்கும் நாங்களெல்லாம். அதை நினைச்சு தானுங்க அடங்கி கிடக்கிறோம்.*

பணமலை :—*எகிறிக் குதிச்சுத்தான் என்ன பிரயோசனம்! ஏண் டா! பணக்காரர்களைப் பார்த்து சில ஓடேந்தும் ஒண்ணரையணு வெல்லாம் ஊளையிடுதே அது ஏ(ன்)? ஒருத்தன் நல்லா வாழரு னேங்கற பொறுமை தானே?*

சோடா :—*இல்லேங்க......*

பணமலை :—(கிண்டலாக) இல்லீங்களா? வேறு என்னங்க காரணம்.....?

சோடா :—கெட்ட எண்ணங்க!

பணமலை :—ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமே இல்லாம செய்யணும்னு கூச்சல் போடறானுங்களே—அது நம்ம காலத்திலே நடக்குமா? நம்ம கண்ணாலே பார்க்க முடியுமா?

சோடா :—அடுத்த ஜென்மத்திலேயாவது அந்த மாதிரி பார்க்கலாம், எசமான். காலம்மாறிப் போச்சுங்க.

பணமலை :—காலம் மாறிப்போகலடா—காலம் கெட்டுப் போச்சு! அடா அடா அடா...... கொஞ்சம் விட்டுக் கொடுத்தா போதுமே—வந்து விடுவீர்களே முகத்தண்ட....! ம் ஹூம்... ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமே இல்லாம செய்துவிட முடியுமா? நான் என் அனுபவத்தில் சொல்றேன்......

(வெளியிலிருந்து 'சார்......சார்' என்று யாரோ அழைக்கும் குரல் கேட்கிறது.)

தொலையட்டும்...... வெளியிலிருந்து யாரோ கூப்பிடற குரல் கேட்குது. யார் என்று விசாரித்து வா......

(சோலை போகிறான்)

சண்டாளப்பய! சமத்துவமும் சகோதரத்துவமும் எங்கிட்டேயே பேச வந்துட்டான். இன்னும் கொஞ்சம் உரிமை கொடுத்தா ஜமீனில் கூட பங்குகேட்பான் போலிருக்கே... சேச்சே! இந்த உலகம் இருந்த மாதிரியும் இல்ல—கெட்ட மாதிரியும் இல்லை. இது தெரிஞ்சுதான் எங்கப்பன் எம்பெருமான் ஆட்டுக்கு(ம்) வாலை அளந்து வைச்சிருக்கான்!

(சோலை வருகிறான், அவனைப் பார்த்து...)

யாருடா, அது!

சோடா :—யாரோ ஒருத்தரு—பட்டணத்திலிருந்து வர்றாங்களாம்!

பணமலை :—ஆளு யாரு? அதைச் சொல்லு முதலில்!

சோடா :—'**நடை பாதையில் வசிப்போர் சங்க**' செயலாளராம், எசமான்!

பணமலே :—என்ன ? என்ன ? நடைபாதையில் வசிப்போர் சங்கமா ? அது ஒன்றுதான் இல்லாமலிருந்தது — அதுக்கும் ஒரு சங்கம் அமைச்சுட்டாங்களா?

சோடா :—என்னங்க செய்யறது? உழைச்சு உழைச்சு ஒளுத்துப் போனவங்க......நல்ல வாழ்வு வேணும்னு உரத்த குரலில் கேட்க நாடியில்லாதவங்க... நாதியற்று நடுத்தெருவில் குடித்தனம் செய்யருங்க... உட்காருவதற்கு ஒரு ஓலேக்குடிசையாவது வேண்டாங்களா? அதுக்காகத்தான்......

பணமலே :—டேய்—டேய்! நீ ஒண்ணும் பிரசங்கம் செய்யவேணும். அந்த ஆளு எதுக்காக வந்தாராம். அந்த சங்கத்தில் ஏதாவது கூட்டம் கீட்டம் போடப் போருங்களாமா? அதுக்கு நான் தலைமை வகிக்கணும்னு கேட்க வந்திருக்காரா—அவரு...?

சோடா :—அதெல்லாம் இல்லீங்க. நன்கொடைக்காக வந்தாராம்...

பணமலே :—அய்யோ... நன்கொடையா...? அட நாசமாய்ப் போனவனே! இதை முதலிலேயே சொல்லியிருக்கக் கூடாது! (தணிந்த குரலில்) டேய்! இங்கே வாடா! வாடா இங்கே! அந்த ஆளேக் கூப்பிட்டு நான் வீட்டிலே இல்லே—வெளியிலே போய் இருக்கேன்னு சொல்லிவிடு......

சோடா:—இல்லே, எசமான்!... நீங்க இங்கே இருப்பதாகச் சொல்லி விட்டேனுங்களே!

பணமலே :—ஏய்! சொன்னதைச் செய்யுடா மடையா !

(அறைக்குள் செல்கிருர்.)

சோடா :—(வெளியில் பார்த்து) என்னங்க ! நன்கொடைக்கு வந்த அய்யா !

செயலாளர் :—(உள்ளே வந்து) என்னங்க !

சோடா :—நீங்க வந்த அதிர்ஷ்டம் எங்க எசமான் இல்லே. அவரு இருந்தா.............சும்மா சொல்லக் கூடாது.........கணக்கே பார்க்க மாட்டாரு நாலு கையாலும் அள்ளி அள்ளிக் கொடுப்பாருங்க......!

செயலாளர் :—நாலு கையால்......?

சோடா :—ஆமாங்க ! அவருடைய ரெண்டு கையால் கொடுத்தா கொஞ்சமா இருக்குமுன்னு என்னுடைய ரெண்டு கையையும் கொஞ்ச நேரம் கடன் வாங்கிக்குவாரு.

செயலாளர் :—என்னங்க ! இப்போதான் அவரு உள்ளே இருக்கிறதா சொன்னீங்க......

சோடா :—ஆங்......வெளியிலே சொன்னேன் இருக்காருன்னு ! இப்போ சொல்றேன் அவரு இல்லேன்னு !

செயலாளர் :—சரி! நான் இன்னொரு தடவை வந்து அவரைப் பார்க்கிறேனுங்க......வரட்டுங்களா ?

(திரும்புகிறார்)

சோடா :—இதோ பாருங்க! காலத்தை ஏன் வீணாக செலவு பண்றீங்க, இன்னொரு தடவை வேறு நல்ல இடத்தில் போய்ப் பாருங்க - இதோ - இந்த ஒரு ரூபாயை என்னுடைய நன்கொடையாக வைச்சுக்குங்க......

செயலாளர் :—(வாங்கிக் கொண்டு; கைகூப்பி) ரொம்பவும் நன்றி ? இந்தாங்க உங்க நன்கொடைக்கு ரசீது.

(ரசீது கொடுத்து விட்டு வணக்கத்துடன் போகிறார், பணமலை வருகிறார்.)

பணமலை :—(அமர்ந்து) அப்பாடா ! வெளியில் தலை காட்ட முடியல. கடன் காரப் பயலுக......காக்கை மாதிரி கொத்தி கொத்தி எடுத்துடறாக.

(சோடா விசிறி எடுத்து அவருக்கு வீசுகிறான்)

சோடா :—என்ன எசமான் செய்யறது ? ஈரம் உள்ள இடத்தில் எறும்பு மொய்க்குது.

பணமலை :—மொய்க்கும்டா - மொய்க்கும்! உன்னைச் சொல்லறதிலே குற்றம் இல்ல...நான் என் அனுபவத்தில் சொல்றேன்...

(வெண்ணிலா கையில் புத்தகத்துடன் வருகிறாள்.)

வெண்ணிலா :—அப்பா ! நான் ஆசிரியர் வீட்டு வரைக்கும் போய் வரணும்......

பணமலை :—ஏம்மா......?

வெண்ணிலா :—ஒரு செய்யுளுக்கு சரியான பொருள் தெரியல. போய் கேட்டுக் கொண்டு வர்றேம்பா.

பணமலை :—அது என்னம்மா அப்படிப்பட்ட பாட்டு ? எதோ-படி, பார்ப்போம்......

வெண்ணிலா :—(படிக்கிறாள்) 'ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன—எட் டி மரம் பழுத்தென்ன பழுக்காதிருந்தென்ன' என்ற பாட்டு அப்பா!

சோடா:—அடடே! இந்தப் பாட்டுக்கு அர்த்தம் கேட்க வாத்தியார் அய்யாவிடம் ஏம்மா போறே. நம்ம அப்பாவே நல்லா சொல்லுவாரே......

பணமலை:—ஏலே, சோடா! உனக்கு வர வர வாய் ரொம்ப நீளுது, கழுத......! எனக் கென்னடா தெரியும்? குழந்தைக்கு நீயே அந்தப் பாட்டின் அர்த்தத்தைச் சொல்லிக் கொடுடா......

சோடா:—சரி, எசமான்! நீ வாம்மா, நான் சொல்றேன், விளக்கம்! எட்டிமரம் பழுத்தென்ன பழுக்காதிருந்தென்ன — பிறருக்குப் பயன் படாத பழங்களைப் பார்வைக்கு அழகாகக் கிளைகள் முழுவதும் எட்டிமரம் பழுத்திருந்தாலும் பயன் இல்லே; அது பழுக்காமல் இருந்தாலும் கவலையில்லே! அதைப் போல, ஈயாத புலவர் இருந்தென்ன போயென்ன - வறுமையால் வாடிவரும் ஏழைகளுக்குப் பொருள் கொடுத்து ஆதரிக்காத கேடுகெட்ட பணக்காரர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்தால் என்ன?— அவர்கள் இந்த உலகத்தை விட்டு ஒழிந்தால் என்ன? இரண்டும் ஒன்றுதான்! இதுதாம்'மா அந்த இரண்டு வரிகளின் அர்த்தம்......

பணமலை:—டேய்! டேய்! அயோக்கியப் பயலே! நீ அர்த்தமாடா சொல்றே என்னையில்லா கிண்டல் பண்றே! இரு... இரு... உன்னைக் கவனிச்சுக்கறேன். வடிவேலன் எங்கேடா......?

வெண்ணிலா:—காலையிலே போனதுப்பா...... மத்தியானம் சாப்பாட்டுக்குக் கூட வீட்டுக்கு வரவேயில்லே., அடுத்த வாரம் பரீட்சை—எப்படிதான் பாஸ் பண்ணுமோ—தெரியல.

பணமலை:—சோடா! இந்தப்பய எங்கே போய் சுத்தறான்னு கண்டு பிடிச்சு இழுத்துகிட்டு வாடா......!

சோடா:—சரிங்க, எசமான்!

(சோடா போகிறான்.)

—திரை—

கதிர் 5

வெட்டவெளி

மாணவர் பட்டம் விடுகின்றனர்.

(மது, பொய்யப்பன், வடிவேலன் முதலியோர் பாட்டுப்பாடி அரட்டை அடித்துக் கொண்டே காற்றாடி செய்கின்றனர்.)

மது :—பொய்யப்பா! இன்னிக்கு நம்ம காற்றாடி நூலுக்கு அருமையான 'மாஞ்சா' போட்டிருக்கேன். சும்மா 'டீல்' விட்டா எல்லா பட்டங்களும் தரையிலே வந்து விழப்போவுது பாரேன்!

வடிவேலன் :—அதிருக்கட்டும், மது! நாளைக்கு என்ன பரீட்சை...?

பொய்யப்பன் :—ஓஹோ நாளைக்குத்தான் பரீட்சையா...?

மது :—அதைப்பற்றி இப்ப என்னடா? இன்னும் இருபத்து நாலு மணிநேரம் இருக்குதே— படிச்சுகிட்டா போச்சு.

வடிவேலன் :—பரீட்சையே என்னண்ணு தெரியலே. படிச்சுக்கறது எப்போ?

மது :—எல்லாம் நாளைக்குப் பள்ளிக்கூடம் போய்க் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம். விளையாடற நேரத்திலே படிப்பைப் பற்றி ஏண்டா கவனம் வருது, முட்டாளுங்களா! கொஞ்சநேரங்கூட சந்தோஷமா இருக்கத் தெரியலேயே! டேய், பொய்யப்பா! காற்றுடியை உயரத் தூக்கி விடுடா...!

(காற்றுடி மேலெழும்புகிறது)

பொய்யப்பன் :—மது! வடிவேலன் இனிமேல் நல்ல பையன்களோடு தான் சேரப் போறானும்.

மது :—அப்படீன்னு நாம என்ன கெட்டவனுங்களா? என்ன வடிவேலா அதைப்போல நீ சொன்னயா?

வடிவேலன் :—சொன்னேன். ஆனு, உன்னை விட்டுப் பிரியறதுக்கு மனசு வர்ல...

மது :—அப்போ—நான் சொல்ற மாதிரி கேளு.

வடிவேலன் :—என்ன

மது :—உங்க அப்பாவுக்குத் தெரியாம அம்பது ரூபா எடுத்து கிட்டு வந்துடு. நாம மூணுபேரும் 'ஜாலியா' டவுனுக்குப் போய் சுத்திட்டு வாலாம்......

பொய்யப்பன் :—அவன் எப்படி எடுத்துவர முடியும்? பூதம் மாதிரி அவங்க அப்பா இரும்புப் பெட்டி பக்கத்திலேயே உட்கார்ந் திருப்பாரே.

மது :—எல்லாம் அவனுல் முடியும்! அவரு பள்ளிக்கூடத்திலே நடக்கப் போகிற ஆண்டு விழாவுக்கு போயிடுவாரில்ல; அன்னிக்கு வேலைக்காரன் சோடாவை ஏமாற்றி சுலபமா எடுத்து வாலாம்.

வடிவேலன் :—ஆல் ரைட்! நீ சொன்னு சரி மது! நான் எப்படி யாவது கொண்டு வந்துடறேன்...!

—திரை—

(தொடரும்.)

நம்பிக்கை

[டாக்டர். மு. வரதராசனார்.]

பழங் காலத்தில் எல்லோரும் படிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. சமுதாயத்தில் சிலர் படித்தாலேபோதும் என்ற நிலை இருந்தது. படிக்காதவரும் வயிறு வளர்த்து வாழ முடியும் என்று நம்பிக்கை கொள்வதற்குச் சமுதாயம் இடம் தந்தது. படிக்காதவர்களுக்கு இருந்த அந்த நம்பிக்கை, இப்போது படித்தவர்களுக்கும் இல்லை. எவ்வளவு படித்த பிறகும், எப்படி வாழப் போகிறோம் என்ற கவலை இக்காலத்தில் பலருடைய நெஞ்சில் குடிகொண்டிருக்கிறது.

பலரும் படிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதால் ஆசிரியர் பலர் இன்று தேவையாக உள்ளனர். மற்றத் தொழிலுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுத்து வளர்ப்பது போல் ஆசிரியர் தொழிலுக்கும் பலரைத் தேர்ந்தெடுத்து வளர்க்க வேண்டியுள்ளது. மற்றத்தொழிலுக்குத் திறமை மட்டும் இருந்தால் போதும். ஒரு சில தொழில்களுக்குத் திறமையோடு தொண்டு மனப்பான்மையும் வேண்டியதாக உள்ளது. ஆசிரியர் தொழிலுக்கு அது அடிப்படைத் தேவையாக உள்ளது. ஆகவே தேர்ந்தெடுத்து வளர்க்கப்படுபவர்கள் அனைவரும் நல்ல ஆசிரியர்களாக ஆக முடிவதில்லை.

பழங்காலத்தில் சிலர் மட்டுமே படித்த காரணத்தால் ஆசிரியர் ஒரு சிலராக இருந்தனர். மாணவர்கள் ஆசிரியர்களைத் தேடிச் செல்ல வேண்டியிருந்தது. பட்டங்கள் தரும் வழக்கம் இல்லாத காரணத்தால் அறிவு வளர்ச்சியே நோக்கமாக ஆசிரியரைத் தேடிச் சென்றனர். ஆகவே மாணவரின் நாட்டத்திலும் நோக்கத்திலும் நம்பிக்கை அடிப்படையாக விளங்கியது. இக்காலத்தில் மாணவர்கள் ஆசிரியரை நாடாமல், கல்வி நிலையங்களை நாடிச் செல்கின்றனர். பட்டம் பெறுதலே முன்மையான குறிக்கோளாக உள்ளது. ஆசிரியர்களும் வயிறு வளர்க்கும் தொழிலைத் தேடி அந்த நிலையங்களை நாடுகின்றனர். இருசாரார்க்கும் புகலிடமாகக் கல்வி நிலையங்கள் வளர்ந் தோங்கிக் கவர்ச்சி ஊட்டுகின்றன. நம்பிக்கை என்றால் இக்காலத்தில் நிலையத்தை நாடி நம்புவதாக உள்ளதே அல்லாமல் ஆட்களை நம்பி நாடுவதாக இல்லை.

பழங்காலக் கல்வி முறையில் ஓரே ஆசிரியரிடம் சில மாணவர்கள் சில ஆண்டுகள் கல்வி பயின்றார்கள். அதனால் நம்பிக்கையின் அடிப்படையில் பற்றும் வளர்ந்தது. மாணவரும் ஆசிரியரிடம் பணிவும் அன்பும் செலுத்தினர். ஆசிரியரும் மாணவரிடம் அன்பும் அருளும் கொண்டனர். இக்காலக் கல்வி முறையில் ஓர் ஆசிரியரிடம் கற்பது என்பது இல்லை.

ஒவ்வொரு நாளும் பற்பல ஆசிரியர்களிடம் கற்கும் முறை உள்ளது. ஆக, ஆசிரியர் பலர்; மாணவர் மிகப் பலர். இரு சாரார்க்கும் உள்ளங் கலந்த அன்பும் பற்றும் வளர்வதற்கு இடம் இல்லை. விதி விலக்காக ஒரு சிலரிடத்து அன்பும் பற்றும் அரும்பினாலும் அவை மலர்வதில்லை. பரந்த வெளியுலக வாழ்க்கையில் ஓயாத இயந்திரம்போன்ற கடமைகள் இருப்பதால் பற்றுக்கும் அன்புக்கும் இடம் இல்லாதவாறு செய்கின்றன.

பழங் காலத்தில் ஏறக் குறைய துறவிகளைப் போல் ஆசை குறைந்தவர்களே ஆசிரியர்களாக இருக்க முடிந்தது. ஊரார் (மாணவர்களின் பெற்றோர்கள்) அவர்களுக்கு உணவும் உடையும் கொடுக்கும் பொறுப்பை மேற்கொண்டனர். ஆகவே தேவை குறைந்த எளிய வாழ்க்கை நடத்திய அத்தகைய ஆசிரியர்களிடம் ஒருவகை பக்தியும் விளங்கியது; இக் காலத்தில் ஆசிரியர்களின் உணவு, உடை முதலியவற்றைப் பணம் தான் தரவல்லதாக உள்ளது. ஆசிரியரும் பணத்தைக் கொண்டு மற்றத் துறையில் உள்ளவர்களைப் போல் வாழ வேண்டிய நிலை உள்ளது. மற்றத் துறையினர்க்கும் ஆசிரியர்க்கும் வேறுபாடு இல்லை. வணிகர், பொருள்களை விலைக்கு விற்பது போல், ஆசிரியர்கள் அறிவை விலைக்கு விற்கக் கடமைப்பட்டவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

பழங் காலத்தில் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுத் துறை சிலவற்றை மட்டும் மாணவர்கள் நாடினார்கள். அந்தச் சிலவற்றைக் கற்பிக்கும் திறன் ஆசிரியர்க்கு இருந்தது. சில ஆண்டுகள் கற்ற பிறகு படிப்பு முடிந்ததாக மாணவர்கள் கருதவில்லை. வாழ் நாள் எல்லாம் கற்று, அறிவை வளர்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்ற தெளிவோடு ஆசிரியரிடம் விடை பெற்றுச் சென்றார்கள். இக்காலத்தில் வாழ்க்கைக்கு வேண்டிய சிலவற்றையும், வேண்டாத பலவற்றையும் சேர்த்து மாணவர்கள் படிக்க வேண்டியுள்ளது. முடிவுத் தேர்வு வரையில் நினைவில் வைத்திருந்து அதன் பிறகு உடனே மறக்க வேண்டியவற்றை விடாமல் பாடுபட்டுப் படிக்க வேண்டியுள்ளது. முடிவுத் தேர்வு எழுதிப் பட்டம் பெற்றவுடன் கல்விக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கும் நிலையும் உள்ளது. யாரோ ஒரு சிலர் தவிர மற்றப் பெரும்பாலோர் தாம் படித்த துறையில் பிறகு அறிவை வளர்த்துக் கொள்ள முயல்வதே இல்லை. ஆகவே இக் காலத்தில் பெரும்பாலோர்க்குக் கல்வி என்பது விரைவில் கடந்து போக வேண்டிய ஒரு பாலம் போல் உள்ளது. பழங்காலத்து மாணவர்களுக்குக் கல்வி, நிலையாக வாழும் வீடு போன்றது என்றால், இக்காலத்து மாணவர்களுக்கு அது சில காலம் தங்கிச் செல்லும் உணவு விடுதிபோல் உள்ளது எனலாம். ஆகவே ஆசிரியரிடம் நம்பிக்கையும் பற்

றும் குறைந்தது போலவே தாம் கற்கும் கல்வியிலும் நம்பிக்கையும் பற்றும் குறைந்துள்ளன.

சில மாணவர்களைச் சில துறையில் வல்லவராக்கும் பழைய நிலை மாறிப் பல மாணவர்களைப் பல துறையில் தேர்ந்தெடுக்கும் புதிய முறை வந்த காரணத்தால் அதற்குத் துணையாகத் தேர்வு (பரீட்சை) என்னும் கருவியும் வந்துள்ளது. அது தவிர்க்க முடியாதது. நம்பிக்கையும் பற்றும் இருந்த காலத்தில் ஆசிரியரின் உள்ளமே மாணவரைத் தேர்ந்தறியும் கருவியாக இருந்தது. அவை குறைந்த காரணத்தால் அவர்களைத் தேர்ந்தறிய வேறு ஒரு கருவி வேண்டியதாயிற்று. இயந்திர நாகரிகம் பெருகிய காலம் ஆகையால் இயந்திரம் போல் உள்ளத்தின் தொடர்பு இல்லாமல் மாணவரைத் தேர்ந்தறியும் தேர்வு முறையே செல்வாக்குப் பெற்றது.

மனிதரின் குறைகள் அவர்கள் படைக்கும் கருவிகளிலும் மறைந்து வாழ்கின்றன. நடுநிலை என்பது பண்பால் உயர்ந்த சான்றோரிடம் மட்டுமே காணப்படுகிறது. பெரும்பாலோரிடம் இல்லாத சரக்கு அது. ஆகவே தேர்வு முறையில் நடுநிலைமை விளங்க வேண்டும் என்று எவ்வளவோ திரைகளை இட்டு மறைத்தாலும் அங்கும் மாசு படிகின்றது. நன்றாகக் கற்றவர்கள் எல்லோரும் தேர்ச்சி பெறுகிறார்களா? கல்லாதவர்கள் எல்லோரும் தோல்வி அடைகிறார்களா? இந்த இரண்டு வினாக்களுக்கும், 'ஆம், ஆம்' என்று முழுவிடை அளிக்கத் தக்க தூயநிலை இன்று இல்லை. ஒழுங்காகப் பாடுபட்ட மாணவர்களில் ஒரு சிலர் தோல்வி அடைவதையும், ஒழுங்கு இல்லாமல் ஏய்த்தவர்கள் சிலர் பயன் பெறுவதையும் பொதுவாக மாணவர்கள் காணும் போது அவர்களின் உள்ளத்தில் இந்தப் புதிய கருவியிடம் வைத்த நம்பிக்கையும் தளர்ந்து போகிறது. ஏதேனும் ஒன்றில் உறுதியான நம்பிக்கை வைத்தால்தான் வாழ்க்கையில் தடுமாறுமல் காலூன்ற முடியும். தேர்வு முறையின் நடுநிலைமையிலேனும் நம்பிக்கை விளங்கினால் தான், ஆசிரியர்களிடம் பற்று இல்லாவிட்டாலும், கல்வியிலாவது பற்று ஏற்படும்.

நம் நாடு வெப்பமான நாடு. ஆண்டில் எட்டு மாதங்கள் மேலாடையில்லாமலே வாழ இடம் தரும் நாடு. ஆனால் எப்படியோ புதிய நாகரிகத்தைக் கற்றுக் கொண்டோம். மேலாடையில்லாமல் வீட்டை விட்டு நாம் வெளியே வருவதில்லை. நகரங்களில் வீட்டினுள்ளும் மேற்சட்டையில்லாமல் இருப்பதில்லை. உடம்பின் குறை பிறர்க்குப் புலப்படாமல் மறைக்கும் நாகரிகக் கருவியாக மேல் சட்டை இன்று பயன்படுகின்றது. ஆகவே இந்தப் புதிய வழக்கத்தை நாம் போற்றி வருகிறோம். இதை மேற்கு நாட்டாரிடமிருந்து கற்றோம். ஆனால்

மேற்கு நாட்டாரைப் போல் நாம் எந்நேரமும் கம்பளிச் சட்டைகளை அணிவதில்லை. பெரும் பாலும் மெல்லியபருத்திச்சட்டைகளையே அணிகிறோம். அதுபோல் நாம் புதிதாக மேற்கொண்ட தேர்வு முறையையும் நம்நாட்டுப் பண்பாட்டிற்கு ஏற்றவகையில் மாற்றி அமைத்திருந்தால், கல்வித் துறையில் முன்னேற்றம் பெற்றிருக்கலாம்.

அவ்வாறு செய்யத் தவறி விட்டோம். அதன் பயனை அனுபவிக்கின்றோம். மாணவர்களின் உடல் மட்டும் அல்லாமல் உள்ளமும் நம்பிக்கை இழந்துகெட்டு வருவதைக் காண்கின்றோம். இனியேனும் தக்க முயற்சிகளை மேற்கொண்டு நம் வாழ்க்கைக்கும் பண்புக்கும் ஏற்றவாறு தேர்வு முறையைத் திருத்தி அமைத்தால் மாணவர்களுக்கு ஆசிரியர்களிடம் நம்பிக்கை ஏற்படும்! கல்வியிலும் நம்பிக்கை ஏற்படும்.

—'ஆநந்த விகடன்'

மூன்றாவது திட்டத்தில் பெண் கல்விக்காக ரூ. 50 கோடி

யூனியன் கல்வித் துறைச் செயலாளர் சையிதீன் தகவல்

அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் மேற்கொண்டு 2 கோடி குழந்தைகளுக்குக் கல்வி வசதியளிக்க வேண்டுமென்பதே உடனடி நோக்கமாகும் என்று யூனியன் கல்வி இலாகா காரியதரிசி திரு. கே. ஜி. சையிதீன் அண்மையில் தெரிவித்தார்.

மூன்றாவது திட்ட காலத்தில் இந்த நோக்கத்தை அடையத் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் கூறினர். இதில் முக்கிய பங்கை ஏற்க வேண்டியவை மாநிலங்களே யாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

ஆரம்பக் கல்விக்கான அகில இந்திய கவுன்சிலின் மூன்றாவது மாநாட்டை அவர் ஆரம்பித்து வைத்துப் பேசினர்.

பெண்கள் கல்வியில் மூன்றாவது திட்டத்தில் பிரத்தியேக கவனம் செலுத்தப்படும் என்றும் பெண்களுக்கும் ஆசிரியைகளுக்கும் உபகாரச் சம்பளங்கள் புத்தகங்கள் ஆடைகளுக்கான அலவன்சுகள் இடை வேளை சாப்பாடு ஆகிய காரியங்களுக்காக ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் சொன்னர்.

மலச்சிக்கல்

[டாக்டர் சி. ஆர். ஆண்டர்சன்]

"டாக்டர், எனக்கு மலம் நன்ருகக் கழிவதில்லை. சில சமயங்களில் இரண்டு, மூன்று நாட்களுக்கு ஒரு தரம் தான் போகிறது. இதற்கு என்ன பரிகாரம் செய்யலாம்?"

"நீங்கள் என்னதைச் செய்யக் கூடாது என்று முதலிலே சொல்லி விடுகிறேன். பேதி மருந்து உட்கொள்ளல் ஆகாது. விஞ்ஞானிகள் நமது குடலைப் பற்றி நெடுங் காலம் ஆராய்ந்து கற்று வருகிருர்கள். ஆயினும் அது வேலை செய்யும் விதம் இன்னும் ஒருவாறு மர்மமாகவே இருக்கிறது. ஆதலால் சில சமயங்களில் மலச்சிக்கல் காரணத்தை அறிதல் மிகவும் கடினமாக இருக்கும். மேலும் நாம் இளமையில் பண்ணும் சில கெட்ட பழக்கங்கள் குடல் செய்கையைப் பெரிதும் முறை புரளச்செய்து விடலாம். பின்பு அதைத் திருத்துதல் எளிது அன்று."

"டாக்டர், கிருமிகளினுலும் மலச்சிக்கல் உண்டாகலாமோ?"

"ஒவ்வொரு சமயம் உண்டாகலாம். பல ஆண்டுகளுக்கு முன் கொலம்பியா பல்கலைக்கழக ஆசிரியர் டாக்டர் ஹாரி ஸெனக்கா 33 நோயாளிகளின் மலத்தைச் சோதனைபண்ணினுர். அவர்கள் 21 வயது முதல் 62 வயது வரை ஆனவர்கள். நீண்டகாலம் மலச்சிக்கல் உள்ளவர்கள். அவர்கள் அத்தனை பேருடைய பெருங்குடலிலும் நுண்ணங்கள் மிகவும் பெருகியிருப்பதை டாக்டர் ஸெனக்கா கண்டார். 32 மடங்கு அதிகமாக இருந்தன! ஆனல் கிருமிகளின் மிகுதிப்பாடு காரணமாக மலச்சிக்கல் உண்டானதா, அல்லது மலச்சிக்கலால் அவை மிகுதிப்பட்டனவா என்று அவரால் உறுதிபண்ண முடியவில்லை."

"அவர் அந்தப் பிணியாளர்களுக்கு எவ்வாறு சிகிச்சை செய்தார்?"

"தாலில் ஸல்பாஸீட்டமைட் (Pthalylsulfacetamide) என்ற ஒரு மாத்திரை கொடுத்தார். இது ஒரு புதிய மருந்து. நல்ல மருந்து. இரத்தத்துடன் உறவாவதில்லை. குடலில் மட்டும் வேலை செய்யும். நச்சுக் கிருமிகளைக் கொல்லக் கூடியது."

"வேறு ஏதாகிலும் கொடுத்தாரா?"

"ஆம், வைட்டமின் மாத்திரை கொடுத்தார். தவிர உணவில் பச்சைக் காய்கறிகளும், முக்கியமாகக் கீரை வகைகளும், தயிரும் மோரும் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளும்படி செய்தார். மோரில் லாக்டோ பஸில்லஸ்

என்ற ஒரு வித நல்ல கிருமிகள் நிறைந்திருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவை பெருங்குடலுக்கு இன்றியமை யாதவை. அதில் இயற்கையா கவே இருப்பவை. எக்காரணத்தி ஞலேனும் அவை போதிய அளவு இல்லாவிடில், அதனுல் பல வகை யான சீரணப்பிணிகள் தோன் றும்."

"நானும் இவ்வாறு செய்ய லாமா, டாக்டர்?"

"செய்யலாம். ஆனுல், உங் கள் குடலில் மலச்சிக்கலை உண்டு பண்ணும் வேறு எந்தப் பிணியா கிலும் இல்லாவிட்டால்தான், இம் முறையினுல் பயன் ஏற்படும்."

இரத்த மூலம்

"அப்படி என்ன இருக்க முடி யும்?"

"பல பிணிகள் இருக்கலாம். அவற்றில் மூலம் முதன்மையா னது. இந் நோயில் மலவாயைச் சுற்றிலுமாவது, அதன் உட்புறத் திலாவது சிறு சிறு இரத்த வீக் கம் அல்லது முளை கிளம்பும். அல்லவா? அவை பல சமயம் ஆணி போன்று அடைத்துகொண் டிருக்கும். ஆதலால் மலம் வெளி வருகையில், அவை நசுங்குகின் றன. அப்போது அவற்றில் கடு மையான வலியோ அல்லது இரத் தப் பெருக்கோ உண்டாகலாம். பல நோயாளிகள் இத் துன்பத் திற்கு அஞ்சி, கூடுமானவரை, மலத்தை அடக்கிக் கொள்ளப் பழகி விடுகிறுர்கள்."

"மூல முளைகளுக்கு எந்த மருத்துவம் தகுந்தது, டாக்டர்."

"அறுவையே மிகவும் ஏற்றதா கும். வீங்கின கெட்ட இரத்தக் குழாய்களில் இலேசாக அறுத்து, உள்ளே இருக்கும் இரத்தக் கட் டியை எடுத்துவிடுவார்கள். சில ருக்கு இதுவே போதும். வலி யும் வீக்கமும் விரைவில் நீங்கி விடும். ஆனுல் மற்றவர்களுக்கு வீங்கின தசையை வெட்டிக் களைய வேண்டிய அவசியம் இருக் கலாம்."

"இதற்கு ஊசி மருந்தும் குத்து கிறுர்களாமே?"

"ஆம், ஆம். அதனுல் குண மும் சில வேளை ஏற்படலாம். ஆனுல் பொதுவாக அதை அவ் வளவு நல்லது என்று சொல்ல முடியாது. அதிக வலி இருக் கும்; சற்றே ஆபத்தும் உள் ளது."

ஆசனவாய் அரிப்பு

"டாக்டர், எனது நண்பர் ஒருவருக்கு நீங்கள் தயவுசெய்து ஒரு மருந்து சொல்ல வேண்டும். அவருக்கு முளைகள் இல்லை. ஆனுல் ஆசனவாயைச் சுற்றிலும் பொறுக்க முடியாத நமைச்சல் பல ஆண்டு இருந்து வருகிறது."

"இது மிகவும் வருத்தமான பிணிதான். வந்தால், எளிதில் போகாது. முதலாவதாக, உங் கள் தோழர் தக்க மருத்துவ சோதனை செய்து கொள்ள வேண் டும். அவருக்கு ஒருவேளை நீரி ழிவு நோய் இருக்கும்; அல்லது

குடலில் கீரைப்பூச்சி அதிகமாக இருக்கலாம். சாதாரணமாகப் பெருங்குடலில் வசிக்கும் இப்பூச்சிகள் சில சமயம் அங்கிருந்து கிளம்பி, மலவாயிலும் அதற்கு வெளியிலும் வந்து நெளியலாம். அதனல் அப் பகுதியில் மிகுந்த அரிப்பு உண்டாகும். பொதுவாக இத் தொந்தரவு குழந்தைகளுக்கே உண்டாகும். எனினும், சிறுபான்மை பெரியவர்களுக்கும் வரலாம். கீரைப் பூச்சிகளைப் போல, இன்னும் அனேக ஒட்டுயிர்கள் இருக்கின்றன. காளான் வகை ஒட்டுயிர்கள் வேறு. இப்படிப் பல காரணங்களால் இந்த நமைச்சல் உண்டாகலாம். ஆகவேதான் ஏதாவது நோய் வந்தால், தகுந்த மருத்துவர்களிடம் போய், அதன் காரணத்தைச் சோதித்து அறிந்து, காரணத்திற்கு ஏற்ற சிகிச்சை செய்ய வேண்டும் என்று நான் திரும்பத் திரும்பக் கூறுகிறேன்.''

''அது தான் சரி, டாக்டர். நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனலும் இந்த அரிப்புக்கு ஒரு மருந்து நீங்கள் சொல்லத் தான் வேண்டும்.''

''காலமைன் லோஷனேடு ஒரு சதவீதம் பீனல் கலந்து, தடவி வரலாம்.''

''சிலர் தொட்டியில் உட்கார்ந்து குளிக்கிருர்களாமே. அது அவசியமா, டாக்டர்?''

''ஆம், ஆம். இடுப்பு முழுக்கு அவசியம் தான். ஆனல் தண்ணீரில் சிறிய அளவு பொட்டாஸியம் பெர்மாங்கனேட் கலந்து கொள்ள வேண்டும். ஏறக்குறைய 10,000 பங்கு தண்ணீருக்கு ஒரு பங்கு மருந்து. தண்ணீர் இலேசாகத் தான் ஊதா நிறமாக இருக்க வேண்டும். நாள் ஒன்றுக்கு இரண்டு தரம் இப்படி நீராடி வரலாம்.''

''இந்த முறைகளினல் பலன் ஏற்படாவிட்டால், என்ன செய்ய வேண்டும்?''

''சொறியுள்ள இடத்தில் ஏதேனும் ஓர் உலர்த்து பொடி போடுதல் நலம். 2 பங்கு ஸாலிஸிலிக் ஆஸிட், 58 பங்கு டால்கம் பவுடர், இவற்றைச் சேர்த்து, நன்ருய்க் கலந்து வைத்துக்கொண்டு, இரண்டு மணி நேரத்திற்கு ஒரு தரம் தூவி வரலாம். 1 சதவீத ஹைட்ரோகார்ட்டிஸோன் ஆயின்ட்மென்ட் என்ற களிம்பு பலருக்கு நலம் அளித்திருக்கிறது. உரப்பான நமைச்சல்களுக்கு எக்ஸ்-ரே சிகிச்சை தானும் தேவைப் படலாம்.''

''என் நண்பருக்கு இன்னும் ஏதாகிலும் ஆலோசனை நீங்கள் சொல்ல வேண்டுமா?''

''ஆம், ஆம். அவர் இயன்ற வரை உள்ள அமைதியோடு வாழ வேண்டும். நான் ஒரு கல்லூரி ஆசிரியரை அறிவேன். அவர் வெகு காலமாக இந்த நோயினல் பீடிக்கப்பட்டிருக்கிருர். ஆனல் அவர் எப்போதெல்லாம் தமது வேலையைப் பற்றி மிகவும் கவலைப் படுவாரோ, அக்கவலையால் இராத் தூக்கம் இழப்பாரோ,

அவ்விதமான சமயங்களிலேதான் நமைச்சல் உக்கிரமாகக் காணும்; சற்று முன்னால் விட்டு இருந்தாலும் அப்போது பலமாகத் திரும்பி வரும். தீராச் சொறியர்கள் இவ் விஷயத்தில் கவனம் செலுத்துதல் நன்மை பயக்கும்."

ஆசன வெடிப்பு

"டாக்டர், மூலத்தைத் தவிர, வேறு எந்தக் குடல் பிணிகளால் மலச்சிக்கல் உண்டாகும்."

"மலக்குடலில் திடீரென அழற்சி காணலாம், சதை கிழியலாம், அல்லது வெடிப்பு ஏற்படலாம். இந்த வெடிப்புகள் மிகவும் வலிக்கும். நாளடைவில் அவற்றில் கிருமிகள் தொற்ற, சுற்றிலும் சீழ்க் கட்டிகள் உண்டாகி, புண்ணாகிவிடும். இவைகளுக்குத் தக்க விதமான சிகிச்சை செய்ய வேண்டும். அல்லாவிடில் அருகில் இருக்கும் உறுப்புகளாகிய மூத்திரப்பை முதலியவை பாதிக்கப் படலாம்."

"வெளியிலே தான் கட்டிகள் உண்டாகுமா?"

"உட் புறத்திலும் பல வகையான சதைக்கட்டிகளும் வீக்கங்களும் புண்களும் உண்டாகலாம். ஆனால் அவற்றில் சிலவே நச்சுக் கட்டிகளாக இருக்கும். பெரும்பாலானவை அபாயம் அற்றவை. எனினும் அவற்றாலும் பல விதத் தொந்தரவுகள் உண்டாகலாம். சின்னாட்களுக்கு முன் ஒரு பெண்மணி எங்கள் மருத்துவமனைக்கு வந்து, தமக்குப் புதிதாக மலச்சிக்கல் கண்டிருக்கிறது என்றும், அது மேன்மேலும் அதிகப் படுகிறது என்றும், அதற்குத் தயவாக ஏதாகிலும் ஆசனக் குளிகை தர வேண்டும் என்றும் கேட்டார். அவரைச் சோதித்தோம். அவர் கருப்பையில் சில கட்டிகள் காணப்பட்டன. அவற்றில் ஒன்று பெருத்து, அவர் மலக் குடலை நசுக்கிக் கொண்டிருந்தது. அவற்றை எடுத்ததும், மலம் தடையின்றி வெளிப்பட முடிந்தது."

குதப் புற்று

"டாக்டர், ஏதோ நச்சுக் கட்டி என்றீர்களே, அது என்னது?"

"புற்றையே அவ்வாறு குறிப்பிட்டேன். மலக்குடலில் சில சமயம் அது கிளம்புவதுண்டு. எக் காரணத்தினாலோ பெண்களை விட ஆண்களுக்கு அது அதிகமாக உண்டாகிறது. அது வளர்ந்து, பெருத்து, வழியை அடைத்து விடுவதால், மலம் தடைப்படும். நோயாளிகள் காலம் தாழ்த்தாது அறுவை செய்து கொள்ள வேண்டும். அன்றேல், உயிருக்கே மோசம் நேரலாம்."

"ஓர் ஆளுக்கு மூலமோ, வெடிப்போ, புற்றோ, கட்டியோ, இவை எதுவும் இல்லாமலும், மலக்கட்டு உண்டாகலாம் அல்லவா? அன்னார் என்ன செய்ய வேண்டும்?"

"நான் ஏற்கனவே சொன்ன

(41-ம் பக்கம் பார்க்க)

ஈராசுப் பாதிரியார்

[இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.]

உலகு அறியாவண்ணம், பன்னெடுங்காலமாக அறியாமை இருளிலே புதையுண்டு கிடந்த **திராவிட வரலாறு-நாகரிகம்-பண்பாடு - மொழி** ஆகியவற்றைத் தம் ஆராய்ச்சியொளி மூலம் அவனி முழுவதிற்கும் விளக்கிக் காட்டி, **அவற்றின் முதன்மை - தொன்மை பெருமை - புகழ்** ஆகியவற்றை உலகுக்கு எடுத்து விளம்பிய அறிஞர் பெருமக்களின் முன்வரிசையில் முதல்வராக வைத்து எண்ணப்படத்தக்கவர் **ஈராசுப் பாதிரியார்** ஆவார்.

(40-ம் பக்கத் தொடர்ச்சி)

படி அவர்கள் பேதிக்குச் சாப்பிடக்கூடாது. மேலும், ஒழுங்கான காலம் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மரக்கறி, கீரை, கறி முதலியவைகளைத் தாராளமாகச் சேர்த்துச் சாப்பிட்டால், மலம் அவ்வளவாக இறுகாது. சரியான அளவு தண்ணீரும் குடித்தல் அத்தியாவசியம். ஒரு நாளுக்கு இரண்டு படிக்குக் குறைதல் ஆகாது. காலை உணவுக்கு முன் இரண்டொரு குவளை வெந்நீர் பருகி வருதலும் குடலைத்தூண்டி, மலத்தைச் சுகமாகக் கழிக்க உதவும்."

—நல்வழி

ஈராசுப் பாதிரியார் சுபெயின் (Spain) நாட்டில் பிறந்து, வளர்ந்து, பாதிரியார் கோலம் பூண்டு, சமயத்தொண்டு புரிய இந்தியத் துணைக்கண்டம் வந்தவராவார். அவர் சமயத் துறையைக் காட்டிலும், வரலாற்றுத் துறையில்தான் மிகவாக இறங்கிப் பணிபுரிந்தார். அவரது தொண்டுகள் வரலாற்றுத் துறையில்தான் சிறந்து ஓங்கி உயர்ந்து காணப்பட்டன.

அவர் சமயக் கருத்துக்களைப் பரப்பிடும் பாதிரியாராக அமைந்திருந்தபோதிலும், பொதுவாக இந்தியத் துணைக்கண்ட வரலாற்றில்—குறிப்பாகத் திராவிடர் வரலாற்றில், புதிய ஆராய்ச்சிக் கருத்துக்களோடு ஒளி நிறைந்த பக்கங்களைச் சேர்த்தவர் என்ற முறையில், ஈராசுப் பாதிரியார் திராவிட இன மக்களால் என்றென்றும் போற்றிப் புகழத்தக்கவரே யாவார். "மாற்றான் தோட்டத்து மல்லிகைப்பூ ஆனாலும், அதன் மணத்தைப் போற்ற நாம் மறுக்கமாட்டோம்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் அறிவுரை கூறியுள்ளதற்கு ஒப்ப, ஈராசுப் பாதிரியாரின் சமயக் கருத்துக்கள் சிலவற்றிலே மாறுபாடுடைய போக்கைக் கொண்டுள்ள நாம், அவரது மணங் கமழும் வரலாற்று ஆராய்ச்சிக்

கருத்துக்களைப் போற்றிப் புகழவே செய்கிறோம்.

அவர் பம்பாயிலுள்ள '**இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கூட்டத்**'தோடு (Indian Historical Research Institute) பல்லாண்டு காலம் தொடர்பு பூண்டு வரலாற்றுத் துறைப் பணி பல புரிந்தார். அவர் செய்த ஆராய்ச்சிகளிலே தலைசிறந்ததாக வைத்து எண்ணப்படுவது; மொகெஞ் சொதரோ—அரப்பா போன்ற மறைந்த சிந்துவெளி நகரங்களின் நாகரிகம், எத்தகைய நாகரிகம் என்பதை உலகுக்கு எடுத்து விளக்கிக் காட்டியதாகும்.

1921-ஆம் ஆண்டுக்குப் பிறகு சிந்துவெளியில் மொகெஞ்சொதாரோ — அரப்பா — சான்குதரோ போன்ற பல மண்மேடிட்ட நகரங்கள், இந்தியப் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினரால் அகழ்ந்து காணப்பட்டன. அகழ்ந்து காணப்பட்ட நகரமைப்பு — கட்டிட அமைப்பு— சாலை அமைப்பு — பழக்கத்தில் கொண்டிருந்த பொருள்கள்— பதுமைகள் — விளையாட்டுப் பொருள்கள் — கல்வெட்டுக்கள் முத்திரைகள்—எலும்புக் கூடுகள் போன்ற பலவற்றையும் வைத்துக் கொண்டு பல்வேறு வரலாற்று அறிஞர்களும் ஆராய்ச்சி நடத்தினர். அவர்களில் முக்கியமாகக் குறிப்பிடப் படவேண்டியவர் இந்தியப் புதைபொருள் ஆராய்ச்சித் துறைத் தலைவராக விளங்கிய சர் சாண்மார்சல் (Sir John Marshall) என்பவர் ஆவார். அவர் 1931-ஆம் ஆண்டில் '**மொகெஞ்சோ தரோவும் சிந்து நாகரிகமும்**' (Mohenjo Daro and the Indus Civilization) என்னும் ஒரு நூலை விரிவாகவும் விளக்கமாகவும் எழுதி வெளியிட்டார். அந்த நாட்களில், இந்திய வரலாற்றுத் துறை, ஆரிய நாகரிகத்திற்கு எல்லாவகையிலும் உயர்வளிக்க வேண்டும் என்னும் விருப்பமுடையோர் கைகளில் பெரும்பாலும் சிக்கிக்கிடந்ததால், இந்தியாவைச் சேர்ந்த வரலாற்று அறிஞர்களும், மறைந்த சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகமே என்று நிலைநாட்ட அரும்பாடுபட்டனர். அவர்கள் பொருந்தாத சான்றுகளை வைத்துக் கொண்டு போலித் தன்மையில் பொருத்திப் பார்த்தார்கள். எல்லாம் நிலை நிற்க முடியாமல் சரிந்து வீழ்ந்தன. ஆராய்ச்சித் திறனும், கூர்மதியும், நடுநிலைத்தன்மையும் கொண்ட சர் சாண் மார்சல், "மறைந்த சிந்து வெளி நாகரிகத்தின் அடிப்படையாளர்கள் அறவே ஆரியர்களாக இருக்கமுடியாது" என்னும் கருத்தை அசைக்க முடியாத தக்க காரணங்களோடு தம் நூலில் விளக்கிக் காட்டினார். சிந்து வெளி நாகரிகம் ஆரிய நாகரிகமாக இருக்க முடியாது என்னும்போது, அது வேறு எந்த நாகரிகத்தைச் சேர்ந்ததாக இருக்க முடியும் என்ற ஆராய்ச்சியில் ஈராசுப் பாதிரியார்

நெடிது நாள் இறங்கித், தக்க சான்றுகளைத் துருவித் துருவி எடுத்து, இறுதியில் அது திராவிட நாகரிகமே என்ற முடிவுக்கு வந்து, 1936-ஆம் ஆண்டில் அந்தக் கருத்தைக் காரண காரிய விளக்கத்தோடு வெளியிட்டார். அவரது அந்தக் கருத்து திராவிடரின் வரலாற்றுக்குப் புதியதொரு ஒளியையும், பொலிவையும் தருவதாக அமைந்தது. ஈராசுப் பாதிரியாரின் அந்தக் கருத்தை எவராலும் அவ்வளவு எளிதாக எதிர்க்க முடியவில்லை. அவரது கருத்துக்கு ஆதரவு தரும் ஆராய்ச்சிக் கருத்துக்களே பல்வேறு வரலாற்று அறிஞர்களிடத்திருந்தும் மேன்மேலும் வரத்தொடங்கின. திராவிட நாகரிகத்திற்கு உயர்வு ஏற்படுவதைக் காணப்பொறாத, சில நடுநிலைமை தவறிய, அழுக்காறு எண்ணங் கொண்ட வரலாற்றாசிரியர்கள் ஏதேதோ மறுப்புக் காரணங்களைச் சொல்லி, ஈராசுப் பாதிரியாருக்கு எதிராக மழுப்பிப் பார்த்தனர். அவர்களது கூற்றுக்கள் இறுதியில் வலிவிழந்து வீழ்ந்தன; ஈராசுப் பாதிரியாரின் கருத்தே நிலைநின்றது.

சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம் அல்லாத ஒரு நாகரிகம் என்பது மட்டுமல்லாமல், அது முழுக்கமுழுக்கத் திராவிட நாகரிகமே ஆகும் என்பதையும், அத்தகைய திராவிட நாகரிகமே இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும் ஒரு காலத்தில் பரவியிருந்தது என்பதையும், அந்த நாகரிகந்தான் மேற்கே பரவிய எல்லா நாகரிகங்களுக்கும் அடிப்படையாக விளங்கிற்று என்பதையும், இந்தியத் துணைக்கண்ட நாகரிகத்திற்கும் சரி, உலக நாகரிகத்திற்கும் சரி, திராவிடந்தான் தொட்டிலாகக் காட்சி யளித்தது என்பதையும் தெள்ளத் தெளிய உலகுக்கு எடுத்துக் காட்டிய பெருமை அனைத்தும் ஈராசுப் பாதிரியாரையே சாரும். அவர் தம்முடைய கருத்தை வலியுறுத்திச் சொற்பொழிவுகள் வாயிலாகவும், நூல்கள் வாயிலாகவும், இதழ்கள் வாயிலாகவும் நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்து வந்தார்.

அவரை நேரில் காணும் வாய்ப்பும், அவருடைய அரிய சொற்பொழிவைக் கேட்கும் வாய்ப்பும் எனக்கு ஒருமுறை ஏற்பட்டது. நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மூன்றாவது ஆனர்சு வகுப்பில் பயின்றுகொண்டிருக்குங்காலை, 1942-ம் ஆண்டில் ஈராசுப் பாதிரியார் சிறப்புச் சொற்பொழிவு ஆற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு வந்தார். அவர் மூன்று நாட்கள் தொடர்ந்து சொற்பொழிவு ஆற்றினார். அவர் சொற்பொழிவு ஆற்ற எடுத்துக்கொண்ட தலைப்பு "**சிந்துவெளி நாகரிகம்**" என்பதாகும்.

அவரது தோற்றமே கவர்ச்சிகரமாக இருந்தது; அவரது சொற்பொழிவு அதைவிடக் கவர்ச்சிகரமாக இருந்தது. குள்ள

உருவம், பருத்த உடல், பரந்த முகம், விரிந்த நெற்றி, வெண்மை நிறம், பெரிய கண்கள், எடுப்பான மூக்கு, அதன்மேல் கண்ணுடி, வெள்ளை அங்கி, வெள்ளிய நீண்ட அழகான தாடி ஆகிய இவற்ருேடு கூடியதுதான் அவரது தோற்றம். ஆராய்ச்சியில் ஈடுபட்டு அப்பொழுது அவரது கண்கள் பார்வை மழுங்கிக் காணப்பட்டன. அவருடன் எப்பொழுதும் உதவிக்கு என்று இருந்த மாணவர்கள் இருவர் அவரை மெல்ல அழைத்து வந்து மேடை ஏற்றுவித்தனர்.

அவர் யாவர்க்கும் புரியும் வண்ணம், தெளிவான சொற்களால், அழுத்தந் திருத்தமாகக் கவர்ச்சிகரமான குரலில் பேசினர். அவர் பேசத் துவங்கியவுடன் உலக முதன் மொழிப் பரம்பரையைச் சேர்ந்ததும், திராவிடக் குழு மொழிகளில் தலைசிறந்து விளங்குவதும், தொன்மை—சிறப்பு-அழகு—இனிமை ஆகிய பண்புகள் வாய்ந்ததும் ஆன தமிழ் மொழியில் தாம் பேச முடியாமல் இருப்பதற்குப் பெரிதும் வருத்தந் தெரிவித்துக் கொண்டார். மற்று மொருமுறை பேசும்படியான வாய்ப்பு சில ஆண்டுகள் கழித்துத் தமக்குக் கிடைக்குமாயின் அப்பொழுது கட்டாயம் தமிழில் பேசுவேன் என்றும் தம் விழைவைத் தெரிவித்துக்கொண்டார். சிந்துவெளி நாகரிகம் ஆரிய நாகரிகம் ஒன்று சொல்லுவதற்கு எவ்விதச் சான்றும் கிடைக்கப்பெருததால், அது ஆரிய மல்லாத ஒரு நாகரிகமாகத்தான் இருக்கக்கூடும் என்பதையும், அங்கு அகழ்ந்து காணப்பட்ட பொருள்கள் திராவிட இனமக்கள் புழங்கும் பொருள்களோடு ஒத்திருப்பதால், அது திராவிட நாகரிகமாகத்தான் இருக்க முடியும் என்பதையும் அவர் விளக்கிக் காட்டினர். சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களிலும், முத்திரைகளிலும் காணப்படும் எழுத்துக்களைப் படிக்க, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மொழிகள் அனைத்தையும் பயன்படுத்திப் பார்த்தபோது, தமிழ் மொழி ஒன்றினுல்தான் அவற்றை எளிதில் புலப்படுத்திக்கொள்ள முடிந்தது என்றும், தமிழ் மொழிக்கும் கோண்ட், கூய், ஓராயான், இராசமகால், பிராமி போன்ற ஏனைய திராவிடக் குழுமொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்கிய ஒரு திராவிட மொழியே மொகெஞ்சொதரோவின் மொழியாக விளங்கி யிருக்க வேண்டும் என்றும் தக்க காரணங்களோடும், விளக்கப் படங்களோடும் அவர் எடுத்துக் கூறினர். கண் மழுங்கிய நிலையிலும் சீமைச் சுண்ணும்புக் கட்டிகொண்டு கரும்பலகையில் படங்களையும், சிந்து வெளி எழுத்துக்களையும் நிதானத்தோடு எழுதிக் காட்டி விளக்கந் தந்தார்.

ஈராசுப் பாதிரியார் அப்பொழுது பேசிய பேச்சிலே மிகவும் வியப்புக்குரியதும், போற்றிப் புகழத் தக்கதும் ஆக இருந்தது

'திராவிட நாகரிகம் எப்படி மேனாடுகளுக்கெல்லாம் பரவிச் சென்றது' என்று விளக்கிக் காட்டியதாகும். கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் தோன்றிய திராவிட நாகரிகந்தான் பிறகு தென்னாட்டு நாகரிகம் ஆகிப் பிறகு மொகெஞ்சொதரோ—அரப்பா நாகரிகமாக ஆயிற்று என்றும், அந்தச் சிந்துவெளி நாகரிகம் பிறகு சுமேரியா நாகரிகமாக மாறிற்று என்றும், பிறகு சுமேரியா நாகரிகம் எகிப்து நாகரிகமாகவும், பிறகு எகிப்திய நாகரிகம் கிரேக்க நாகரிகமாகவும், பிறகு கிரேக்கநாகரிகம் உரோமானிய நாகரிகமாகவும், பிறகு உரோமானிய நாகரிகம் சுபெயின் நாகரிகமாகவும், பிறகு சுபெயின் நாகரிகம் பிரிட்டானியா நாகரிகமாகவும் மாறி மேனாடு முழுவதும் பரவிற்று என்றும் தக்க ஆராய்ச்சிக் கருத்துக்களால் நிலைநாட்டினார். மொழி - நாகரிகம்-பண்பாடு-எண்ணைப் பத்து வரையிலும் எண்ணும் பழக்கம்-ஆண்டை ஞாயிற்றைக் கொண்டு கணக்கிடுவது மாதத்தைத் திங்களைக் கொண்டு கணக்கிடுவது - வாரத்திற்கு ஏழு நாட்கள் என்று கொள்ளுவது—ஒவ்வொரு நாளையும் ஞாயிறு, திங்கள், கோள்கள் ஆகியவற்றின் பெயரால் அழைப்பது என்பன போன்றன் திராவிட நாகரிகம் கற்றுக் கொடுத்த பாடந்தான் என்பதைப் பிறமேற்கத்திய மொழிகளிலிருந்து சான்றுகள் காட்டிவிளக்கினார். ஈராசுப் பாதிரியார் கீழைநாட்டு—மேலை நாட்டு மொழிகளில் **பதினாறு மொழிகளில்** நன்கு எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டிருந்தார்.

அவர் தமது மூன்றுநாள் சொற்பொழிவை ஆற்றிவிட்டு, மூன்றாவதுநாள் பேசி உட்காரும் போது, "Hitherto Father Heras was not speaking to you, but a Dravidian from Spain"[**இதுவரையில் உங்களிடம் பேசிக்கொண்டிருந்தது ஈராசுப் பாதிரியார் அல்லர்; சுபெயின் நாட்டிலிருந்து வந்த ஒரு திராவிடரே பேசிக் கொண்டிருந்தார்.**] என்று பேசிவிட்டு உட்கார்ந்தார். நானும் என்னைப் போன்ற மாணவர்களும் அவரது இறுதிச் சொற்றொடர் கேட்டு மண்டபம் அதிரக் கையொலி முழக்கினோம்.

மறுநாள் காலை நானும், எனது இளவல் இரா. செழியனும் பிற நண்பர்களும் ஈராசுப் பாதிரியார் தங்கியிருந்த விருந்தினர் விடுதிக்குச் சென்றோம். அவர் அன்போடு எங்களை வரவேற்று இனிமையாக ஒரு இரண்டு மணி நேர காலம் உரையாடிக்கொண்டிருந்தார். "தங்களுக்குத்தான் கண்கள் இரண்டும் மங்கி மழுங்கி விட்டனவே! எப்படிப் படிக்கிறீர்கள்? எப்படி எழுதுகிறீர்கள்?" என்று கேட்டேன். அவர் தம்முடன் இருந்த இரண்டு மாணவர்களையும் அழைத்து, அவர்கள் இருவரையும் இரண்டு பக்கத்திலும் இரண்டு கைகளால் பிடித்துக்

கொண்டு, "இந்த இருவருந் தான் எனது இரண்டு கண்கள்" என்று சொல்லிவிட்டுப் புன்னகை புரிந்தார். நாங்கள் அவரிடம் விடைபெற்றுக்கொண்டு எழுந்திருக்கும்போது, "தாங்கள் நேற்றைய சொற்பொழிவின் இறுதியில் குறிப்பிட்ட சொற்றொடரை, அப்படியே எழுதித் தங்கள் கையெழுத்துப் போட்டுத் தரவேண்டும்" என்று நான் அவரிடம் விரும்பிக் கேட்டுக் கொண்டேன். அவரும் அன்புடன் அப்படியே கையெழுத்துப் போட்டுத் தர இசைந்தார். நான் என் கையிலிருந்த பெரிய சங்க இலக்கிய நூலை விரித்து நீட்டினேன். அவருடன் இருந்த மாணவர் ஒருவர் பேனாவை உறை நீக்கி அவரிடம் கொடுத்து, அவர் கையைப் பிடித்து ஏட்டில் வைத்தார். ஈராசுப் பாதிரியார் எழுதத் தொடங்கினார். ஒரு வரி எழுதி முடிந்ததும் "போதும் நிறுத்துங்கள்; அடுத்த வரிக்கு வாருங்கள்!" என்று அந்த மாணவர் சொல்லி, பாதிரியாரின் கையைப் பிடித்து அடுத்த வரி எழுத வைத்தார். இப்படியாகவே ஒவ்வொரு வரியையும் அவர் எழுதினார். அவர் எழுதியது' "I, the undersigned, am a Dravidian from Spain. 14th III 42. H. Heras S. J." [**கீழே கையொப்பம் இட்டுள்ள நான் சுபெயின் நாட்டிலிருந்து வந்த ஒரு திராவிடன் 14-3-42. எச். ஈராசு எசு. சே.**] என்பதாகும்.

இப்படியெல்லாம் திராவிட மக்கள் மறக்க முடியாத அருந்தொண்டுகள் பல ஆற்றிவந்த ஈராசுப் பாதிரியார் தமது 67-ஆம் வயதில் 14-12-1955 இல் இயற்கை எய்தினார் என்ற செய்தி நம்மையெல்லாம் துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்த்துகிறது. அவரது இழப்பு அவ்வளவு எளிதில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவர் தம் இறுதிக் காலத்தில் பம்பாய் சேவியர் கல்லூரியில் 'வரலாறு—பண்பாடு' துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். 'இந்திய வரலாற்று ஆராய்ச்சிக் கூடத்' தோடும் அவர் நீண்ட காலத் தொடர்பு கொண்டிருந்தார்.

அவர் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் பலப்பல. அவற்றில் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது, 1953-ஆம் ஆண்டில் வெளிவந்த "இந்திய—மத்திய தரைப் பகுதிப் பண்பாட்டின் அடிப்படைபற்றிய ஆராய்ச்சிகள்" (Studies in Proto-Indo Mediterranean Culture) என்னும் நூலாகும். அதன் விலை ரூ. 175-0-0 அந்த நூலைப் பலபடப் பாராட்டிப் பேரறிஞர்கள் பலர் இதழ்களில் எழுதியுள்ளார்கள்.

ஈராசுப் பாதிரியார் திராவிட மக்களுக்குச் செயற்கரிய பல

(47—ம் பக்கம் பார்க்க)

தலைவனை ஒழித்த தையல்

[**தில்லை மறைமுதல்வன்** எம். ஏ., பி. எல்.,]

சார்லட்டி கோர்ட்டே என்ற அழகி ஒருத்தி பிரெஞ்சுப் புரட்சியின் சரித்திர ஏட்டில் இடம் பெற்ற கதை இது.

அவளுடைய படத்தை வைத்துக்கொண்டு வர்ணிப்பதானால் அவளைப் பின்வருவதுபோல வர்ணிக்கலாம்; அகன்று நீண்ட விழிகள்; செழித்துத் திரண்ட கன்னங்கள்; அளவான இதழ்கள்; இரண்டாகப் பிரித்து இரு தோள்களிலும் புரளவிட்டிருக்கும் சுருண்ட கூந்தல்; நல்ல உடற் கட்டுதான்! அலட்சியமாகப் பார்த்தவனை ஆர்வத்தோடு பார்க்க வைக்கும் கவர்ச்சி என்பதில் ஐயமில்லை!

கேயன் நகரத்தைச் சார்ந்த இந்த இள மாதுக்கு அப்போது இருபத்தைந்து வயதுகூட நிரம்பவில்லை. அறிவுத் தாகமும் புதுமைக் கருத்துக்களில் வேட்கையும் கொண்டவள். பிரச்சினைகளை எளிதில் புரிந்து கொள்ளவும், அவற்றைப்பற்றி ஒரு முடிவுக்கு வரவும் அவள் அந்த இளம் பிராயத்திலேயே தேர்ந்து விட்டாள். அப்பிரேனால் அவளுக்கு மிகவும் பிடித்தமான ஆசிரியன். விடுதலை உணர்ச்சியோடு வாழ்வதற்காக வீட்டை விட்டு வெளியேறி தோழி ஒருத்தியோடு வசித்து வந்தாள்.

பிரெஞ்சுப் புரட்சிக்கு அடிப்படையாக அமைந்திருந்த தத்துவங்களை மாபெரும் இலட்சியங்களாகப் போற்றி வளர்த்தாள் சார்லட்டி கோர்ட்டே. முடியரசை ஒழித்துக் கட்ட முன்வந்த குடியரசுவாதிகளான '**ஜிரோண்டின்**' கட்சியாரிடம் அவளுக்குத் தனிப்பற்று.

கேயன் நகரிலிருந்த அவள் திடீரென்று ஒரு நாள் பாரீஸ் நகருக்குப் பயணமானாள். பாரீஸ் நகரை விட்டு உயிரோடு திரும்பி வரமுடியாது என்ற துணிச்சலோடுதான் அவள் கிளம்பினாள். ஏனெனில் அவள் மேற்கொண்டிருந்த காரியம் அப்படிப்பட்டது!...

* * * *

அது 1793-ம் ஆண்டு.

மிகப் பெரிய முடியாட்சிகளில் ஒன்றான பிரெஞ்சு முடியாட்சி பிரெஞ்சுப் புரட்சியின் பசி கொண்ட தீ நாக்குகளுக்கு இரையாகி விட்டது. குடியரசு

(46-ம் பக்கம் தொடர்ச்சி)

செய்த பெரியாராவார். அப்பெரியாரின் தொண்டு திராவிட மக்களுக்கு நல்ல ஊக்கம் அளிப்பதாக! அவரது புகழ் என்றும் நின்று நிலவுவதாக!

—" **மன்றம்** "

நிர்மாணித்த 'கில்லட்டின்' என்ற விசித்திரமான கொலை மேடையில் அரச குடும்பத்தாரும் ராஜ விசுவாசிகளும் இரக்கமின்றி இழுத்தெறியப்பட்டு விட்டனர்.

ஆண்டாண்டு காலமாக அனுபவித்துவந்த வறுமைக்கும் கொடுமைக்கும் முடிவு காலம் வந்துவிட்டது என்று மக்கள் எக்களித்தனர். ஆனால் அந்தோ! குடியரசைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் தந்து தீரவேண்டியிருந்த 'பலி' இன்னும் பாக்கி இருந்தது!

புதிதாகப் பிறந்த குடியரசுக் குழந்தையின் மென்னியைத் திருகிக் கொன்றுவிட பிரெஞ்சு நாட்டின் எல்லையில் அன்னியப் படைகள் குவிந்தன. மிச்சமிருந்த ராஜ விசுவாசிகள் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கியிருந்தனர். நாட்டைச் சுற்றிலும் பகைவர்கள்! நாட்டுக்குள்ளே விரோதிகள்! இந்த பீதி பிரான்ஸ் முழுவதிலும் ஒரு வெறியைக் கிளப்பி விட்டு விட்டது.

தீவிர இடதுசாரிகளான **'ஜேகோபின்'** கட்சியினர் பயங்கரமான ரத்தக் களரியில் குதித்தனர். ரோன்சின் என்ற நடிகனின் தலைமையில் ஆறாயிரம் பேர் கொண்ட புரட்சிப் படையை அமைத்து நாட்டிலுள்ள குடியரசின் பகைவர்களைத் தேடிப் பிடித்துக் கொன்று குவித்தனர். 'சந்தேகத்துக்குரியவர்களைப் பற்றிய சட்டம்' ஒன்று கொண்டுவரப்பட்டு, கில்லட்டின் கொலை மேடையில் மனிதத் தலைகள் பூச்செண்டுகளாக விளையாடப் பட்டன.

ரோபெஸ்பியரும், டாண்டனும், மாரூட்டும் 'ஜேகோபின்' கட்சியின் பலத்தை மிக விரைவில் வளர்த்து விட்டனர். இவர்களில் **மாரூட்** திடீரென்று பிரபலமானான். அவன் ஜிரோண்டின் கட்சியை மிகக் கடுமையாகத் தாக்கினான்.

முடியாட்சியை வீழ்த்திக் குடியரசை நிலைநாட்டிய ஜிரோண்டின் கட்சியில் திருமதி ரோலண்டு, வெர்னியாட், இஸ்னார்ட், பிரிஸ்ஸோ ஆகிய பேரறிவாளர்கள் நிறைந்திருந்தனர். எனினும் மக்களாதரவு மாரூட்டின் பக்கமே வளர்ந்தது. ராஜ விசுவாசிகள் பலர் ஜிரோண்டின் கட்சியின் பெயரைப் பயன்படுத்திக் களங்கமேற் படுத்தினர்.

வெறிபிடித்த ஜேகோபின்கள் விவேகத்தைக் கைவிட்டனர்; நாட்டுப் பேரவையிலிருந்த ஜிரோண்டின் கட்சியைச் சேர்ந்த 22 தலைவர்கள் கில்லட்டின் வெட்டுப் பாறையில் பலியாயினர்...

குடியரசு குழப்பத்தில் தத்தளித்தது......

* * * *

ஜிரோண்டின் கட்சித் தலைவர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டது, அவர்களிடம் மதிப்பு வைத்திருந்த சார்லட்டி கோர்டேயின் உள்ளத்தைப் பெரிதும் கலக்கி

விட்டது. ஜேகோபின்களின் தலைவன் மாரூட் அவள் கண்களுக்கு முதல்தரமான கொடுமைக் காரனாக விளங்கினான். அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

கேயன் நகரிலிருந்தபோது கோர்டே, அங்கிருந்த படைத் தலைவனான பெல்சுன் என்பவனைச் சந்தித்தாள். இருவருக்குமிடையே உள்ளப் பிணைப்பு ஏற்பட்டது. ஆனால் இந்த உறவு அதிக காலம் நீடிக்கவில்லை. பெல்சுன் 'ராஜ விசுவாசி' என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொல்லப்பட்டான். இந்தக் கைங்கரியத்தைச் செய்து முடித்தவன் மாரூட்!

அப்போது கோர்டேயின் மென்மையான இதயத்தில் பொறியாகத் தோன்றிய வெறுப்பு கடைசியில் பெருந் தீயாகிவிட்டது. எப்படியாவது மாரூட்டை ஒழித்துக் கட்டிவிடுவது என்ற ஆத்திரத்தோடு பாரிசுக்குப் பயணமானாள்......

* * * *

கேயன் நகரை விட்டுக் கிளம்பிய கோர்டே மூன்றாவது நாள் நண்பகலில் பாரிசுக்கு வந்தாள்.

வந்த அடுத்த நாள் அதிகாலையில் கடைக்குச் சென்று ஒரு புதிய கத்தியை வாங்கிக் கொண்டாள். வாடகைக் குதிரை வண்டி ஒன்றில் மாரூட் இருந்த வீட்டுக்குக் கிளம்பினாள். ஆனால் அனுமதி கிடைக்காமல் ஏமாற்றத்தோடு திரும்பினாள்.

அதற்கடுத்தநாள் ஜூலை 13-ம் தேதி...மாலை எட்டு மணி! அறிமுகக் கடிதம் ஒன்றை எழுதி எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

மாரூட் தங்கியிருந்த வீட்டுத் தலைவி முதலில் மறுத்தாள். அவளுக்கு வயது இருபத்தேழு. நாகரீகமாகச் சொல்ல வேண்டுமானால் மாரூட்டின் 'காதலி'! அந்த வீட்டிலேயே மாரூட் நடத்திவந்த பத்திரிகை அலுவலகமும் இருந்தது.

அப்போது மாரூட் குளித்துக் கொண்டிருந்தான். அவன் அனுமதி கிடைத்ததும் கோர்டே போனாள். தனி அறையில் குளிக்கும் தொட்டியில் மார்பளவு தண்ணீரில் சுகமாகக் குளித்துக் கொண்டிருந்தான் மாரூட். உள்ளே வந்த கோர்டேயின் அழகு அவனுக்குப் பிரமிப்பைத் தந்தது. அப்போது அறையில் வேறு எவருமில்லை......

"உன் பெயர் என்ன?"

"சார்லட்டி கோர்டே"

"எங்கிருந்து வருகிறாய்?"

"கேயன் நகரத்திலிருந்து"

ஜீரோண்டின் கட்சியைச் சேர்ந்தவர்கள் யார் யார் கேயன் நகரில் இருக்கின்றனர் என்பதைக் கேட்டான். அவள் எல்லோருடைய பெயரையும் கூறினாள். குளிக்கும் தொட்டியிலிருந்தபடியே புத்தகம் ஒன்றில் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டான்.

"அவர்கள் எல்லோரும் விரைவில் 'கில்லட்டி'னுக்குப் போய்

விடுவார்கள்'' என்று சொல்லி விட்டுச் சிரித்தான், மாரூட்.

அடுத்த கணம் மார்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து மாரூட்டின் நெஞ்சில் ஆழமாகக் குத்தினாள் கோர்டே!

"ஆ" என்ற அலறல் மட்டும் மாரூட்டின் வாயிலிருந்து வெளிப் பட்டது. குளிக்கும் தொட்டியி லிருந்த நீர் சிவப்பாயிற்று! அவன் பிணமானான்!

கூக்குரல் கேட்டதும் வீட்டுத் தலைவி ஓடி வந்தாள். பத்திரிகை படித்துக் கொண்டிருந்த பணி யாள் ஒருவன் ஓடிவந்தான். கையில் பட்ட ஒரு நாற்காலியை அவள்மீது வீசினான். அடிபட்டு மூர்ச்சையானாள் கோர்டே...!

* * * *

மாரூட் கொல்லப்பட்ட செய்தி எங்கும் பரவியது. பரபரப்பு வினாடிக்கு வினாடி வளர்ந்தது. பாரிஸ் நகரமே துயரத்தில் ஆழ்ந் தது.

நாட்டுப் பேரவை கூடி, மாரூட்டின் சவ அடக்கத்தை விசேஷ மரியாதைகளோடு நடத் துவது என்று முடிவுசெய்தது. பான்தியான் என்ற இடத்தில், இறந்து இருபது ஆண்டுகளுக் குப் பின்னரே எவருடைய உடலையும் அடக்கம் செய்யலாம் என்று சட்டமிருந்தது. விதி விலக்காக மாரூட்டின் சவத்தை அந்த இடத்தில் புதைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

பலநாட்கள் வரை மாரூட்டின் சடலம் பார்வைக்கு வைக்கப் பட்டது. மேலும், அவன் மார்பி லிருந்த கத்திக் காயம் மூடப் படாமலிருந்தது. மக்கள் திரள் திரளாக வந்து அவன்மீது மலர் தூவிச் சென்றனர்.

சவ ஊர்வல தினத்தில் பாரீஸ் நகர மக்கள் தொகுதி தொகுதியாக அணிவகுத்து வந் தார்கள். மாலை வேளைகளில் எந்த மரத்தடியில் அமர்ந்து மாரூட் மக்களுக்குத் தனது செய்தித் தாளைப் படித்து விளக்குவானோ, அதே மரத்தடியில் அடக்கம் செய்யப்பட்டான்.

சவ அடக்கம் முடிந்தபிறகு ரோபெஸ்பியர் பேசினான்:

"ஈட்டி முனைகள் எனக்காக வும்கூட காத்துக் கொண்டிருப் பது எனக்குத் தெரியும். சந் தர்ப்ப வசமாக மாரூட் எனக்கு முன் பலியாகி விட்டான். இனி பேசிப் பேசி உங்கள் ஆற்றலை வீணாக்காதீர்கள். மாரூட்டின் எதிரிகளைக் கொன்று குவிப்பதே அவனுக்கு நாம் செலுத்தும் மரி யாதை! மாரூட் செய்ததைவிட நாம் கூடுதலாகப் பழி வாங்க வேண்டும்!"

நாட்டுப் பேரவையின் தலைவர் அடுத்ததாகப் பேசினார்.

"மக்களின் நண்பன் இறந்து விட்டான். வஞ்சனை அவனைக் கொன்று விட்டது. அவனது ஆற்றலைப் பற்றிய புகழ் மொழி களை அவனுடைய சடலத்தின்

மீது நாம் தெளிக்க வேண்டாம். அவன் ஆற்றல் அவன் மார்பி லுள்ள காயத்தில்தான் இருக் கிறது! பிரஜைகளே! மாருட்டுக் காக அவர்களை நாம் பழிவாங்க வேண்டாம். ஆனல் குடியரசுக் காக அவர்களைப் பழிதீர்ப் போம்...”

பாரீஸ் கம்யூன் என்ற நகர சபையும், வேறு பல கழகங்களும் ஒன்றன்பின் ஒன்ருக வந்து மலர் தூவி மரியாதை செலுத்தின.

எல்லாம் முடிந்து கலைந்து சென்றபோது எல்லோருடைய உள்ளத்திலும் சோகம் கப்பி யிருந்தது.

புரட்சிக்கு எதிரானவர்களைக் கொன்று குவிப்பது ஒன்றுதான் சிறந்த வழி என்ற பயங்கரமான தத்துவத்தைத் துவக்கத்தி லிருந்தே மாருட் கடைப்பிடித்து வந்தான். அளவற்ற தைரியமும் தற்பெருமையும் கொண்ட அவ னது உள்ளங் கையில் பாரீஸ் நக ரமே அடங்கிக் கிடந்தது. அவன் செய்த கொடுமைகள் ஒரு உன் னதமான குறிக்கோளிலிருந்து பிறந்ததால் ‘வெறி பிடித்த பைத் தியக்காரன்’ என்ற இழிமொழியி லிருந்து அவன் தப்பித்துக் கொண்டான்!

அழிவு வேலை நடத்தும் தலை வன் இனித் தேவையில்லை என்று பிரான்ஸ் நினைத்தபோது, சந் தர்ப்பவசமாக ஒரு பெண்ணின் கையிலிருந்த கட்டாரி பிரான்சின் ஆசையை நிறைவேற்றியது!

பிரெஞ்சுப் புரட்சின் நாட் களில் ஒரு மகத்தான சக்தியாக விளங்கிய மக்கள் தலைவனின் முடிவு இத்தனை சோகவயமாக இருந்தது...

* * * *

இதற்கிடையில் விசாரணைக் கூடத்தில் நிறுத்தப்பட்டாள் கோர்டே!

‘மாருட்டைக் கொன்றது நான் தான்!’

“எதற்காகக் கொன்ருய்?”

“அவனுடைய குற்றங்களைச் சகிக்க முடியாமல்”

“குற்றங்கள் என்று நீ கருது வது...”

“புரட்சிக்குப் பின் விளைந்த கொலைகளும், நாசங்களும்...”

“ஜிரோண்டின் கட்சியார் தூண்டித்தானே இந்தக் கொலை யைச் செய்தாய்?”

“இல்லை. எவரும் என்னைத் தூண்டவில்லை. நான் எனது நாட் டுக்கு அமைதியைத் தர விரும்பி னேன். அதற்காக...”

“ஒரு மாருட்டைக் கொன்று விட்டதால், எல்லா மாருட்டுகளை யும் கொன்று விட்டதாக நினைக் கிருயோ?”

கடைசியில் அவளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அந்தக் கேட்டு அவள் முகம் எந்த உணர்ச்சியையும் வெளிக் காட்டவில்லை.

சிறையிலிருந்து தன் தந்தைக்குக் கடைசியாக ஒரு கடிதம் எழுதினாள் :

" அன்புள்ள தந்தையே! என்னை மன்னியுங்கள். உங்கள் அனுமதியின்றி என்னை நானே அழித்துக் கொள்கிறேன். நாட்டுக்கு நான் செய்த சேவையை என்றாவது ஒருநாள் மக்கள் உணர்வார்கள். என்னை மறந்து விடுங்கள். அல்லது எனக்குக் கிடைத்த 'பாக்கியத்'துக்காகப் பெருமைப் படுங்கள். ஏனெனில் நான் ஒரு உன்னதமான காரணத்துக்காக இறக்கிறேன். கார்னீலியின் சொற்களை நினைத்துக்கொள்ளுங்கள்—குற்றம்தான் அவமானத்தை ஏற்படுத்தும்; தூக்கு மரமல்ல!"

அவளுடைய மரணத்தை வேடிக்கை பார்க்க வழி நெடுக பாரீஸ் நகரமே திரண்டிருந்தது. ஒற்றைக் குதிரை கட்டை வண்டியில் அவளை 'கில்லட்டி'னுக்கு அழைத்துச் சென்றபோது மக்கள் கூட்டம் அவளைக் கண்டு பிரமித்துவிட்டது.

அப்போது அவளுக்கு இருபத்து ஐந்து வயதாக மூன்று மாதங்களே பாக்கியிருந்தன. மணமாகாத அழகுச் செல்வி! கலக்கமின்றிக் கம்பீரமாக அமர்ந்திருந்தாள். கண்களில் சலனமற்ற பார்வை—உதடுகளில் புன்னகை உறைந்திருப்பது போலத் தோற்றம்—குற்றம் செய்த பாவனையே அவளிடம் இல்லை. ஏதோ ஒரு மகத்தான தியாகம் செய்து விட்டதுபோல ஒரு திருப்தி...

அவள் செயலை வெறுத்தவர்கள்கூட அப்போது அவளைக் கண்டு இரக்கப்பட்டனர். கொலை மேடைக்கு வந்ததும் ஒரு போர் வீரன் அவள் தோளைச் சுற்றியிருந்த ஆடையைக் களைந்தான். மார்பிலிருந்த ஆடை கலைந்தது. அப்போது கூச்சத்தால் அவள் கன்னங்கள் சிவந்தன.

அவ்வளவுதான்— கொலைக் குறிப்பைத் தெரிவிக்கும் மூன்று முரசுகள் முழங்கின. அவள் தானாகவே பீடத்தில் தலையை வைத்தாள். கில்லட்டின் தன் கடமையைச் செய்தது.

சாவிலும் அழகில்லாமல் வெட்டுண்டு கிடந்த அவள் தலையை, கொலையாளி காலால் எட்டி உதைத்தான்.

மென்ட்ஸ் நகரத்திலிருந்து பிரதிநிதியாக வந்திருந்த ஆடம் லக்ஸ் என்பவன் மட்டும் மனந் தாங்காமல் கூச்சலிட்டான்:

" அவள் புரூட்டசைவிட மேலானவள்!"

இப்படிச் சொன்ன குற்றத்துக்காக அவனும் வெட்டுப் பாறையில் தலையிழந்தான்!

* * * *

பல நூற்றாண்டுகளாகக் கொடுமைக்காளான மக்கள் வீறுகொண்டெழுந்து விடுதலை பெற்றுங்கூட உணர்ச்சிக்குப் பலியானதால், பீதிக்கும் சந்தேகத்துக்கும் ஆட்

பட்டதால், எதிரிகளோடு தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டனர். ஆனால் பிற்கால பரம்பரையினருக்காக அவர்கள் ஒரு படிப்பினையை 'உயில்' எழுதி வைத்துச் சென்றிருக்கின்றனர்:

"வெட்டுண்ட தலைகளாலோ வழிந்தோடும் ரத்தத் தாலோ கொடுமைகள் மாய்ந்திடுவதில்லை. மக்களின் உள்ளத் தெளிவும், எண்ண உறுதியும், செயல் திறனுமே நிலையான பலனைத்தரும்!"

* * * *

ஜிரோண்டின்களின் அழிவுக்குப் பிறகு ஜேகோபின்கள் மூன்று பிரிவாகப் பிரிந்து ஒருவரை ஒருவர் கில்லட்டினில் பலி கொடுத்துக் கொண்டதும், பிரான்ஸ் நெப்போலியன் என்ற ராணுவத் தளபதியின் பிடியில் சிக்கியதும், அவன் ஐரோப்பாவை அலற அடித்ததும், செயின்ட் ஹெலினா தீவில் இறந்ததும், வேறு இரு லூயிகளின் உருவில் முடியரசு உயிர் பிழைக்க முயன்றதும், கடைசியில் பிரான்ஸ் குடியாசு நாடாக நிலைத்து விட்டதும் வேறு கதைகளாகும்! ஃ

—"முரசொலி"

" ஆரம்பக்கல்வி "
ஆபீஸ்.

94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1,

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 3–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் *பாரங்களை அனுப்ப தபால் செலவு :*

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

உரைநடையின் ஊற்றிடம்

(டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி, வித்வான், M. A. M.O.L., Ph. D. தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்)

நாம் தாயுடன் பேசுகிறோம்; தம்பியுடன் பேசுகிறோம்; ஆசிரியருடன் பேசுகிறோம். நம்முடைய பேச்சைக் கேட்டுத் தாய் மகிழ்கிறாள்; தம்பி அழுகிறான்; ஆசிரியர் சீறுகிறார். எனவே, நாம் பற்பல சுவை உண்டாகப் பேசுகிறோம் எனலாம். எனினும், நாம் பேசுவது பாட்டா? பல சுவையைப் பயப்பது என்றால், அஃது இலக்கியம் எனப்படும். ஆனால், இலக்கியமென்றால், அது பாட்டாகத்தான் இருக்க வேண்டும் என்பது பெரும்பான்மையோர் கொள்கை. பிறருடைய உள்ளத்தைக் கவரும் நம் பேச்சும் இலக்கியமே, ஆனால், நம் பேச்சுப் பாட்டன்று; உரைநடை அல்லது வசனமே ஆகும். இப்படி ஓர் எளிதான இலக்கியப் போக்கு நம் வாயில் ஒவ்வொரு விநாடியும் உருளுகின்றதென நாம் அறிதல் வேண்டும். இக்காலக் குடியரசு உலகில், பெரும் பான்மையோர் பேசும் அழகிய பேச்சுநடையெல்லாம் சிறந்த இலக்கிய நடையேயாகும். இன்று, உலகெங்கும் உரை நடைக் காப்பியங்களே தோன்றி வளர்ந்து வருகின்றன. புதிய காலத்தின் புதுமை இதுவாகும். பெரும்பான்மையாகப் பாட்டில் எழுதுவதே, பழங் காலத்தின் பெருமையாகும். அதற்கு மாறாக, உரைநடையில் எழுதுவதே, இக்காலத்தின் எழிலாய் விட்டது.

ஆனால், உரைநடையே எழுதவில்லை நம் முன்னோர் எனல் ஆகாது; இக் காலத்தின் புதுப் படைப்பாகும் உரைநடை எனல் ஆகாது. நம் முன்னோர்காலத்திலும் உரைநடை உண்டு. அந்த உரைநடை எப்படி எப்படியெல்லாம் வளர்ந்து, இன்றுள்ள நிலைமையைஅடைந்த தென்பதை நாம் அறியாமல் இருக்கலாமோ?

இப்போது நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் மிகமிகப் பழையது தொல்காப்பியமே. ஆனால், அஃதோர் இலக்கண நூல். அதில் செய்யுளியல் என்ற ஒரு பகுதியுண்டு. செய்யுள் என்றால் யாது என்பதை ஆராய்வது அப் பகுதி. செய்யுளென்றால், பாட்டாகத்தான் அஃது இருக்கவேண்டும் என்பது பெரும்பான்மையோர் எண்ணம். ஆனால், செய்யப்படுவது என்னும் பொருளுடையதே செய்யுளாகும். இது பாட்டாகவும் இருக்கலாம்; உரைநடையாகவும் இருக்கலாம் இதுவே பழந்தமிழர் கொள்கை. Literary Composition என்று ஆங்கிலத்தில் கூறுகிறார்களே, அதுவே செய்யுள் எனப்படும். கிரேக்கர் முதலியோர், செய்யுள் என்றால், அது பாட்டாகத்தான்

இருத்தல் வேண்டும் என்று கொண்டார்கள். இதனை நோக்க, நம் பழந்தமிழர் கொள்கை, புதுக் காலத்திற்கும் ஏற்றதாக அமைந்த தெனலாம். உரைச் செய்யுளைப் பற்றித் தொல்காப்பியர் கூறியுள் ளார். நூல் எனப்படும் விஞ்ஞா னம், இலக்கணம், முதலிய சாத் திரங்களில் வரும் சூத்திரங்க ளெல்லாம் சிறுசிறு சொற்றொட ரால் கருத்துக்களை விளக்குவன. அவையெலாம் உரைச்செய்யுட் கள் எனப்படும். பழமொழிகள், விடுகதைகள், மந்திரங்கள் முதலி யனவும் உரைச் செய்யுட்களால் வரும். **சிறுகுரீஇ** முதலாக Aesop's Fables போன்றவை பழங்காலத்தில் வழங்கின. அவை யெல்லாம் உரைச்செய்யுளால் ஆனவையே. அவையெல்லாம் ஒருவகைச் சந்தம் பெற்று இயங் குவன ஆதலின், அவற்றையும் பாட்டெனவேமயங்கி வழங்கி னர். அவையெல்லாம் இக்கால உரைநடையின் ஊற்றிடம் என் றால், அது புதுமையாகவே தோன்றலாம்.

மயக்க மில்லாத பண்டைய உரைநடையை நக்கீரர் எழுத்தில் நாம் காணலாம். எனவே, அவரை உரைநடையின் தந்தை என்று லும் அது மிகையாகாது. தொல் காப்பியம், முச்சங்கத்துள் இடைச்சங்க காலத்தில் எழுந்த தென்பர். மூன்றும் சங்கமாகிய கடைச் சங்கத்தில் எழுந்தவையே சங்க நூல்களாகும். சங்கத்திற் குப் பழந்தமிழ்ப் பெயர் தொகை என்பதாகும். எனவே சங்க நூல் கள், அக்காலத்தில், தொகை நூல்கள் என வழங்கின. எட்டுத் தொகை நூல்கள் என்ற வழக் கில், தொகை என்னும் வழக் கினை இன்றும் உணரலாம். சங்கம் என்ற பெயர் வழக்கு ஏற்பட்ட நாள் முதல் தொகை என்ற வழக் கின் பொருளும் மறைந்து, தொகுக்கப்பட்டதே தொகை என்ற பொருளைப் பெறுவதா யிற்று. 'மதுரைத் தொகை யாக் கினனும்' என்ற ஆளுடைய பிள்ளையார் (சம்பந்தர்) பாடலில், சங்கம் என்னும் பொருளில், தொகை வழக்கிருந்தமையை உணரலாம். கடைச்சங்கப் புல வர்களில் சிறப்புற்றிலங்கிய புல வரே நக்கீரர் எனப்படுவர். Akbar the Great என அரச ரிற் சிறந்தாரை உயர்த்திக் கூறு கிறோம். அதுபோலச்சிறந்த புல வரைக் குறிக்க 'ந' என்ற எழுத் தை அப் புலவர் பெயருக்கு முன் வழங்குவது பழங்கால வழக்கு. Kirar The Great என்ற வழக் கில் நக்கீரர் என்ற பெயர் வழங் கியது. கீரர் என்பது அப் புலவ ருடைய இயற்பெயர். சிறப்பு டைக் கீரர் என்பது நக்கீரர் என் பதன் பொருள்.

தொல்காப்பியம், இலக்கியத் தில் வரும் கருத்துக்கள் எப்படி எப்படியெல்லாம் அமைதல் வேண்டும் என விளக்குகிறது. கருப்பு நாளிலே, புலவர்கள் எல்லாம், சங்கம் இருந்த மது ரையை விட்டு, வயிறு வளர்க்க எங்கேயோ போய் விட் டார்களாம். ஆதலால் தொல்

காப்பியத்திலே கூறப்பெற்ற கருத்துக்கள் பின்னே வந்தவர்களுக்கு விளங்காமல் போயினவாம். அன்புதான் உயிர்நிலை. அதன் பல பல கோலங்களைக் காதலன் காதலி வாழ்விலே வைத்து இன்பம் தோன்றப் பாடுவதே அகப்பொருள் எனப்படும். அதனை மக்கள் அறியமாட்டாது போன காலத்தில் அரசன் வருந்தினனும். அப்போது **இறையனார்** என்பவர் அகப் பொருள் என ஒரு நூல் இயற்றித் தந்தாராம். அந்த இறையனார் என்பவர், மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளிக்கும் சொக்கநாதப் பெருமானாரே யாவர் எனக் கதைவழங்குகிறது. ஆனால், அந்த நூலுக்கும் உரை வேண்டும் அன்றோ! கருப்புத் தீர்ந்தபிறகு, வெவ்வேறு ஊர்களிலிருந்த புலவர்களை எல்லாம், அரசன் வருவித்தானும். அவர்களெல்லாம் உரை கூறினார்களாம். அவர்களுள் நக்கீரனார் என்பவர் கூறிய உரைதான் சிறந்ததெனத் தேர்ந்து கொள்ளப்பட்டதாம். ஐந்து வயது பிள்ளை! அதுவோ ஊமைப்பிள்ளை! மெய்யுரை கேட்டபோது, கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்த்து நின்று, உண்மையை வெளியிட்டதாம். குழந்தை உள்ளந்தான் உண்மையறியும் உள்ளம் அதனைக் கடவுள் உள்ளம் என்று கூடச் சொல்லலாம். குழந்தைகள் அதனை இழந்துவிடக் கூடாதென்பதையே இந்தக் கதை உணர்த்துகிறதெனலாம். குழந்தைகளே யல்லவா பிற்காலத்து நற்குடி மக்களாக இலங்குவன! மற்றோர் உண்மையும் உண்டு. உண்மை, நம் உணர்ச்சியைத் தூண்டி, நம் ஊன்செருக்கை மறக்கச் செய்து விடும் எனவே, இந்த உரையானது சிறந்த இலக்கியம் போல நம்மை உணர்ச்சிவயமாக்கிவிடும் ஆற்றல் வாய்ந்தது எனலாம். கதையைப் பொய்யெனச் சாதிக்க முற்பட்டு நாம் கருத்தை இழந்துவிடல் ஆகாது. இதுநிற்க.

நக்கீரர் கூறிய உரை அப்போதே எழுதப் பெறவில்லை. அவருடைய மாணவர் வாய் வழியாகவே அது வழங்கிவந்தது. வேதம்கூட எழுதாக்கிளவியாய் வாய்வழியாகவே வந்ததென்று தானே கேள்விப்படுகிறோம்! நக்கீரருக்குப் பின்னே ஒன்பது தலைமுறை ஆசிரியர்கள் பெயர்களை நாம் அவ் வுரையால் அறிகிறோம். இறுதியாக வந்தவர், அந்த உரையை எழுத்தில் எழுதினார் போலும்! அவருடைய பெயரும் நக்கீரரோ என்னவோ! அல்லது முசிரி நீலகண்டமோ! அவ் வுரை, நக்கீரர் உரை எனவே வழங்குகிறது. 'நின்ற சீர்நெடுமாறன்' என்று சம்பந்தர் பாடுகிற பாண்டியன்மேல் பல பாடல்கள் அந்த உரையில் வருகின்றன. அவன் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். எனவே, அந்த நூற்றாண்டில் அவ்வுரை எழுத்தில் எழுதப்பட்டது எனலாம். வாய் வழியே வளர்ந்த உரையில், அவன் பாடல்கள் அவன் காலத்

தில் இடம் பெற்றிருக்கலாம், ஆனால், உரைநடை, நக்கீரர் காலமாகிய சங்க காலத்தது என்று கொள்ளுவதில் இழுக்கொன்றும் இல்லை.

இப்போது கிடைக்கின்ற உரைநடைப் பகுதியுள்ள இலக்கியங்களில், சிலப்பதிகாரத்தில் வரும் சில உரைநடைப் பகுதிகளே பழையன என்று கூற வேண்டும்.

"சித்திரப் படத்துட் புக்குச் செழுங்கோட்டின் மலர் புனைந்து மைத்தடங்கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்திப் பத்தருங் கோடும் ஆணியும் நரம்பு மென்று இத்திறத்துக் குற்றம் நீங்கிய யாழ்கையிற் றொழுது வாங்கி" என உரைநடைப் பகுதி சிலப்பதிகாரத்தில் வரக் காண்கிறோம்.

ஆனால் ஒரு நூல் முழுதும் உரை நடையாக வருவதனை முதல் முதல் இறையனார் அகப்பொருள் உரையில்தான் காண்கிறோம். அகப்பொருள் உரைநடை, சிலப்பதிகார உரைநடைப் பகுதிபோல் அவ்வளவு கடுமையாக இல்லை. அதுபோலப் பாச்செய்யுள் நடையை முழுதும் பின்பற்றவில்லை; பாவின் சந்தமும் சில இடங்களில் இல்லாமல் இல்லை. ஆனால், அந்தச் சந்தத்தையும் உரைநடைச் சந்தமாக்குவதற்கு அங்கங்கே உடைத்தெறிகிறார் நக்கீரர் என்பதையும் காண்கிறோம். பிற இடங்களிலெல்லாம் பேசுவதுபோலவே அவர் எழுதுகிறார். ஆனால், இன்று பேசுவதுபோலவே அக் கால நக்கீரர் எழுத வில்லை என்பது உண்மைதான். ஏன்? அக்காலத்தவர் பேசிய பேச்சுநடை வேறு வழியில் தானே இருந்திருக்கும்! ஆனால், அந்த நடை இக் காலத்தவர்க்குப் புதுமையாகவே தோன்றலாம்; அருமையாகவும் தோன்றலாம். எனினும், உண்மை உணர்ந்தால், உரைநடை வளர்ச்சியில், பழையது வேறு, இக் காலத்தில் வழங்கும் புதியது வேறு என்று கொள்ள எவரும் மறுத்தல் முடியாது. இப்போது வருகிறான், போகிறான் என்று நிகழ் காலத்திற்குக் 'கிறு' என்ற இடைநிலை போட்டுப் பேசுகிறோம். ஆனால், அக் காலத்தில் 'வாரா நின்றான்' 'போகா நின்றான்' என 'ஆநின்று' என்ற இடைநிலையே போட்டுப் பேசுவது வழக்கம் 'இது அன்றோ; 'அது அன்றோ' என ஒருமையில் அன்றோ!' என்று போட்டுப் பேசும் வழக்கம் கூடப் பழையதாகி விட்டதே! 'அது அல்லவா!' என்று ஒருமைக்கும் 'அல்லவா' என்றல்லவா இன்று பேசுகிறோம். இவ்வாறு, ஒருமைக்குப் பன்மை கூட்டிப் பேசுவதும் எழுதுவதும் தவறென்றால், 'பழம் பசலி' என்ற பட்டம் அல்லவா இன்று இலக்கண நெறியாளர்க்குக் கிடைக்கிறது! காலத்தின் போக்கு இது! புதிய வெள்ளத்தில், கலங்கல் நீரொடு கலங்கல் நீராகமாறினால்தான், வாழ்வு உண்டுபோலும்! நக்கீரர், 'இஃது

ஆகாதே, என்று பேசுகிறார். மாணிக்க வாசகர் காலப் பேச்சும் இம்முறையில்தான் இயங்கியுள்ளது. 'இவன் வந்தானும்' 'அவன் போனனும்;' 'இப்படிப் பேசிக் கொள்ளுகிறார்கள்', 'அப்படிச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்' என்றெல்லாம் இன்று பேசிக் கொள்ளுகிறோம். 'சங்கமிருந்து தமிழாராய்ந்தது நாற்பத்தொன்பதின்மர் என்ப', 'தமிழ் ஆராய்ந்தது உத்தர மதுரை என்ப' என்று பேசுவதே அக் காலவழக்கம். இப்படி யெல்லாம் வருதலால் நக்கீரர் நடை கடுமையான நடை என்று கொள்ளலாமா? எனவே, நக்கீரர் உரைநடை பேச்சு நடையாகவே செல்கிறதென்லாம். இப்போது அத்தகைய பேச்சுநடை மாறிவிட்டது; பேச்சு நடையில் சொற்களும் முடிவுகளும் மாறி வழங்கத் தலையெடுத்துவிட்டன. ஆனல், பேச்சுநடையில் அன்று வழங்கிய சில முறைகள், இன்றும் பேச்சு நடையில் ஒட்டிக்கொண்டிருத்தலே நாம் காண்பதுவியப்பாகவே இருக்கிறது. பொதுமக்களோ, பாட்டியோ கதை சொல்லும் போது அந்தாதி போல வருகிற ஒரு நடையை இன்றும் காண்கிறோம்.

"இராவணன் சீதையைத் **தூக்கிக்கொண்டு போனன்; தூக்கிக்கொண்டு** போனனை, வழியிலே ஒரு **கழுகு வந்தது; கழுகு வந்து,** இராவணனேடு சண்டைபோட்டது ; **சண்டை போட்டு"** என இவ்வாறு ஒரு சொற்றொடரின் முடிவே, அடுத்த சொற்றொடரின் முதலாகக் கதையைச் சங்கிலிபோலப் பிணைத்துக் கொண்டே கூறுவது இன்றும் பாட்டிகள் பேச்சில் உள்ளது. 'இறைவன் எழுதிப் பீடத்தின் **கீழிட்டான்; இட்ட** பிற்றைஞான்று; தேவர்குலம் வழிபடுவான் **அலகிட்டான்; இட்டாற்கு.** அவ் வலகினேடும் இதழ் **போந்தன; போதரக்** கொண்டு போந்து அரசற்குக் காட்ட' என இப்படி அந்தாதித் தொடையாக, நக்கீரர், உரை கூறிக்கொண்டு செல்கிறார். இந்தப் பேச்சு நடை அழகை இன்றும் கதை கூறுமிடத்திலெல்லாம் போற்றக் காண்கிறோம். எனவே, கதையில் வரும் பாத்திரங்கள் பேசுவது போலவே நக்கீரர் உரைநடை அமைந்துள்ளது,சிலவிடங்களில்.

காதலனும் காதலியுமாக இருந்து பேசும் அன்பின் கதையைத்தானே அகப்பொருள் கூறுகிறது! தொல்காப்பியரோ அதனைக் கதைபோலத் தொடர்ந்து கூறவில்லை. தலைவன் பேசும் இடங்கள், தலைவி பேசும் இடங்கள் என்று இப்படித்தான் அவர் சில குறிப்புக்கள் கூறுகிறார். இடையறவு பட்ட காலத்தில், அக் குறிப்புக்கள் விளங்காமற் போயின என்றால், அதில் வியப்பொன்று மில்லை; தவறான செய்தியும் இல்லை. ஆனல், அவற்றை ஒரு கதையாகக் கோத்து விடலாம் என்பது இறையனர் அகப்பொருளால் விளங்குகிறது. காலத்திற்கு ஏற்றாற்போல், நக்

கீரர் உரை, ஒரு கதையாக அமைந்திலங்குவது சுட்டி அறிதற் குரியதே!

அன்றியும், மாணவரும் ஆசிரியரும் பேசிக் கொள்வதுபோலக் கேள்வியும் பதிலுமாக வரும் பேச்சு நடைமுறையும் நக்கீரர் உரையில் காண்கிறோம்.

பேச்சுநடையிற் போலச் சொற்கள் முன்பின்னாக வருமாறு "பூவே, சாந்தே, பாகே, எண்ணெயே, அணிகலனே என்றிவற்றால் புனையவேண்டா அன்றே, தான் இயல்பாக நன்றாயின்!" என்றெல்லாம் அவர் எழுதிப் போகிறார். அவர் எழுதிப்போகிறார். "தான் இயல்பாக நன்றாயின், பூவே, சாந்தே" என்று எழுதுவது தான் இலக்கண நடை. மேலும் 'பூவும்சாந்தும்' என இக்காலத்து 'உம்' போட்டால்தான் விளங்குவது, அக்காலத்தில் 'ஏ' பெற்றுப் 'பூவே, சாந்தே' என நடை பெற்றிருந்ததையும் காண்கிறோம்.

நம்முடைய பாட்டிமார் பேசும் போது பழமொழியை அடுக்கிக் கொண்டே போவதைப் பார்க்கலாம். அந்தப் பழமொழியில் உவமை நயமெலாம் காணலாம்; எதுகை மோனை நயமெலாம் காணலாம்; நக்கீரர் இட்ட பிச்சை, இன்று பாட்டிமார் பேசும் பேச்சு. 'நேர்வாள மாத்திரையை வெல்லத்தில் உருட்டிக் கொடுப்பதுபோல' என்பது இக்காலப் பேச்சு. 'கடுத்தின்னா தானைக் கட்டி பூசிக் கடுத் தீற்றிய வாறு போல்' என்பது நக்கீரர் காலப் பேச்சு. கிழிந்த கந்தையை உள்ளே வைத்துத் தைத்து மேலே தையல் தெரியாதபடி தைப்பது வழக்கம். பை வாங்குவோர் உள்ளே திருப்பிப் பார்த்து வாங்க வேண்டும். நம்முடைய உடம்பும் கிழிந்த கந்தையால் ஆன பை போன்ற தென் பதை உள்ளே திருப்பிப் பார்த்துத் தெரிந்துகொள் என்கிறார் நக்கீரர். "பைம்மறியா நோக்கப் பருந்தார்க்கும் தகைமைத்தே" எனப் பேசுகிறார் நக்கீரர். "பைம் மறியா நோக்கப்படும்' என நாலடியாரும் இதனைப் பொன்னே போல் போற்றுகிறது. 'குடத்துள் விளக்குப் போல' 'நிறைந்திருந்ததோர் கொள்கலம் பிறிதொன்றற்கு இடங் கொடாதது போல' எனச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறும் உவமைகளும் நக்கீரர் உரைநடையில் உண்டு. இவ்வாறன்றி நீண்டு செல்லும் உவமைகளும் உண்டு.

அன்பு என்பதனை மிகச் சிறந்ததோர் உயிர்த் தத்துவமாகக் காட்டித் தத்துவ நூல் ஆராய்ச்சியை யெல்லாம் நக்கீரர் காட்டுகிறார். என்றாலும், அவர் கூறும் உவமைகளின் விளக்கத்தால், கடினமானவை யெல்லாம் தெளிவாகி விடுகின்றன; இனிக்கவும் செய்கின்றன.

நக்கீரர் உரையில், மணிப்பிரவாள நடையில் வருவதுபோல, வடமொழிச் சொற்கள் பயின்று

வரவில்லை. பல்லவர் காலத்தில் எழுதப் பெற்ற கல் வெட்டுக்களெல்லாம் வடமொழிக் கலப்பை மிகுதியாகப் பெற்றிருக் கும்போது, அக்காலத்தில் எழுத்து வடிவம் பெற்ற இவர் உரைநடை அக் கலப்பைப் பெறாது நின்றது அருமையே யாகும். எனவேதான், வாய் வழியே ஒன்பது தலைமுறைக்கு முன்னிருந்து இவ்வுரை வந்த தென்பதை உண்மை யென ஏற் றுக்கொள்ளவேண்டி யிருக்கி றது. பல்லவர் காலத்தில் புதிய தாக எழுந்த தென்பதாயின், வடமொழிக் கலப்பு மிகுதியாகப் பெறாதிருக்கவே முடியாது. என் றாலும், கருமம் காரகம், காரண காரியம் போன்ற பரிபாஷைச் சொற்றொடர்கள் இல்லாமல் இல்லை. இன்றியமையாத இடத் தில், இவ்வாறு பயன்படுத்து பவர் அவற்றைத் தினவு தீர விளக்கியும் உள்ளார்.

இவர் உரையில், பாச்சுவை யுள்ள பல பழம் பாடல்கள் எடுத்தாளப்பெற்றுள்ளன. மறக்க முடியாதபடி இனிக்க இனிக்க அவ்வற்றிற்கு விளக்கம் கூறிச் செல்கிறார் இவர். "கொங்குதேர் வாழ்க்கை" என்வரும் இறைய னார் பாட்டிற்கு இவர் எழுதும் உரை, எல்லோரும் விரும்பிப் போற்றும் உரையாகும். சூத்திரங் களை எடுத்தாண்டு விளக்குவதி லும், இவர் உரையில், இனி மையே காண்கிறோம்.

பேச்சு நடையாக எழுதுவது மட்டுமல்லாமல் பா நயமாகவும் தோன்ற, வாய்ப்பு நேரும் போதெல்லாம் இவர் எழுது வதைப் படித்துப் பழகிவிட்டால் அதைப் படிப்பதிலேயே ஓர் இன் பம் காணலாம். ஒரு சோலை மயிலின் காட்சிகள் உரையில் எங்ஙனம் பா ஓவியமாக வரு கின்றதென்பதைத் தமிழராகப் பிறந்தவர் அறியாமல் இருத்தல் ஒவ்வாது. அது,

"மரகதமணி விளிம் படுத்த
மாணிக்கச்சுனை மருங்கினதோர்
மரகதவல்லி மண்டபத்து
போதுவேய்ந்த பூநாறு கொழுநிழற்கீழ்க்
கடிக்குருக்கத்திக் கொடிபிடித்துத்
தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடு தொடுத்து
ஞான்று வந்து இழிதரும் அருவி
பொன் கொழித்து மணிவரன்றி
மாணிக்கத் தொடு வயிரமுந்தி
அணிகிளர் அருவி ஆடகப் பாறைமேல்
அதிர் குரல் முரசின்கண் இரட்ட

வண்டுந் தேனும் யாழ்முரல
வரிக்குயிலும் கிளியும் பாடத்
தண்டாது தவிசுபடப் போர்த்ததோர்
பளிக்குப் பாறை மணித்தலத்து மிசை
நீல ஆல வட்டம் விரித்தாற் போலத் தன்
கோலக் கலாவங் கொள விரித்து
முளை இள ஞாயிற்று இள வெயில் எறிப்ப
ஓர் இளமயில் ஆடுவது நோக்கி நின்றுள்"

என்பது.

இவர் உரையே ஓர் அழகிய தமிழ்ச்சோலை; பூ மரங்களும் பழ மரங்களும் நிறைந்து மணமும் சுவையும் பயப்பதோர் இன்பச் சோலை; தண்ணிழல் தந்து நண்ணுவார்க்கெல்லாம், வெயர்வை போக்கி அயர்வைத் தீர்க்கும் அருட்சோலை; பூந்தடம் நிறைந்து மாந்துவார்க்கெல்லாம் இன்சுவை மிகத்தரும் இணையிலாச் சோலை, உரை நடை இலக்கியம், இவ்வாறு, இன்பச் சோலையாய் இலங்கக்கூடும் என நக்கீரர் காட்டுவதை அவர் உரை நடையில் புகுந்து பார்த்துத் தெளிவது தமிழ் மாணவர் கடன். எனவே, இன்றைய உரைநடை இலக்கியங்கட்கெல்லாம், நக்கீரர் உரை நடையே ஊற்றிடம் என்லாம் அன்றே!

—சென்னை மாணவர் மன்றம் வெள்ளி விழா மலர்

(64-ம் பக்கத் தொடர்ச்சி)

வது பயிற்சி) தவறாது மேற்கொள்ள வேண்டும்; குளிப்பது, நீச்சலடிப்பது, படகு ஓட்டுவது முதலியனவும் விரும்பத்தக்கவை.

முன் பருவ முதுமையைத் தவிர்ப்பதற்கு, நல்ல ஆரோக்கியமான உணவுத் திட்டத்தைப் பின்பற்றுவதும் மிகவும் முக்கியமாகும். சாதாரணமாக உணவுப் பண்டங்களை ஜீரணிப்பதும், உடலிலுள்ள உயிரணுக்களின் ஆரோக்கியமான வளர்ச்சியும் பெரும்பாலும் 45-50 வயதில் கோளாறுகளுக்கு உள்ளாகின்றன. இவையும் குறிப்பாக, மூளைச் சதையும் முன்பருவ முதுமைக்கு அழைத்துச் செல்லுகின்றன என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு. எனவே, ஒவ்வொருவரும் விஞ்ஞான பூர்வமான உணவுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதில், போதிய காய்கறிகளும், முரட்டு ரக ரொட்டியும் இடம் பெற வேண்டும். கொழுப்புப் பொருள்களை, முக்கியமாக மிருகக் கொழுப்புக்களை உட்கொள்ளுவதைக் குறைத்துக்கொண்டு, அதற்குப் பதிலாகத் தாவர எண்ணெய்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்

நீண்ட ஆயுளின் இரகசியம்

[ஆர். பிர்யூகோவா]

மனிதனின் இயற்கையான ஆயுட்காலம் 100 ஆண்டுகளுக்கு மேல் இருக்க முடியும்,—இருக்க வேண்டும். வெகு காலத்திற்கு முன்பே விஞ்ஞானிகள் கண்ட முடிவு இது. மேலும் இது, புராதன காலம் தொட்டு இந்தியாவில் இருந்து வரும் நம்பிக்கைக்கு ஒத்ததாகவும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

வேறு சில நாடுகளைப் போல சோவியத் யூனியனிலும் நூறு வயதைக் கடந்தவர்கள் பலர் உள்ளனர். கார்க்கோவ் பல்கலைக் கழகம் தயாரித்துள்ள புள்ளி விவரப் புத்தகம் ஒன்றில், 100 வயதைக் கடந்த 40,000 பேர்களைப் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஏராளமான அளவிற்குச் சூரிய ஒளியும் திராட்சைத் தோட்டங்களும் பெற்றுள்ள அப்காஜியா மலைப் பிரதேசங்களில் வாழும் மக்கள் மட்டுமே 100 ஆண்டுகளும் அதற்கு மேலும் உயர்வாக வாழ முடியும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் அர்மீனியாவிலும் அஜர்பெய்ஜானிலும், யுக்ரைனிலும் மால்டேவியாவிலும் பஷ்கிரியாவிலும் பெர்ம் பிராந்தியத்திலும் கிரஸ்னோடார் பிரதேசத்திலும் சைபீரியாவிலும் 100 வயதைக் கடந்த "புராதன மனிதர்கள்" ஏராளமாக உள்ளனர். கூட்டுப் பண்ணை விவசாயிகள், இயந்திரத் தொழிலாளர், அலுவலக ஊழியர், விஞ்ஞானிகள், கலைஞர்கள், நடிகர்கள் முதலிய பல பிரிவைச் சேர்ந்தவர்கள் இத்தகைய நீண்ட வாழ்வைப் பெற்று, இனிது வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நூற்றுண்டு மனிதர்கள் பற்றிய சிறப்பியல்புகள் யாவை? இவர்களுடைய உடல் அமைப்பும் உறுப்புகளும் ஒரே சீரான முறையில், காலத்திற்கேற்ப க்ஷீணித்திருக்கின்றன என்பதை முதலில் கூற வேண்டும். வயதாவதற்கு முன்பே வயோதிகம் அடைபவர்களுக்கு சாதாரணமாக ஏற்படும் தீராத இருதய வியாதிகளும் இரத்தக் குழாய் வியாதிகளும் இவர்களைப் பிடிப்பதில்லை. இவர்களை நேரடியாகத் தெரிந்தவர்கள், சமூக வாழ்வில் இவர்கள் ஆர்வமுடன் பங்கெடுத்து வருவது குறித்தும், பெரும்பாலும் மிகப் பெரியதான தமது குடும்பத்திடம் இவர்கள் மிகுந்த பற்றுதல் கொண்டிருப்பது பற்றியும், மக்களிடத்தில், சிறப்பாக இளைஞர்களிடத்தில் இவர்கள் பேரன்பு பாராட்டுவது குறித்தும் பல வியக்கத்தக்க தகவல்களை அளிக்கிறார்கள். இவை எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமானது அவர்களுடைய ஆக்கபூர்வமான உழைப்பேயாகும்

இவர்கள் ஏதோவொரு வேலையில் ஈடுபட்டுக்கொண்டு, அந்த வேலையில் ஆர்வமுடன் முனைந்து விடுகின்றனர். ஒரு மனிதன் வேலை செய்வதிலே மகிழ்ச்சியைக் காண்பானேயானால், அதுவே அவனது உடலாரோக்கியத்திற்கு அறிகுறியும் ஆதாரமும் ஆகும்.

ஆனால், ஏன் எல்லோருமே 100 ஆண்டுகள் வாழ்வதில்லை? பருவத்திற்கு முன்பே பலர், பழுத்து வயோதிகமும் மரணமும் அடைந்துவிடுவது ஏன்? இதற்கான மிகவும் பரவலான காரணங்கள் யாவை?

முதுமையில் இரு வகை உண்டு என்றும், ஒன்று, உடல் நூல்பூர்வமான முதுமை என்றும் மற்றொன்று நோய்வழி முதுமை என்றும் மெக்னிகோவ் என்ற விஞ்ஞானி கண்டார். 1939-ல் கீவ் நகரில் முன்பருவ முதுமை பற்றிய பிரச்னைகளை விவாதிப்பதற்காகக் கூட்டப்பட்ட ஒரு சிறப்பு விஞ்ஞான மாநாடு இந்த ஆய்வுரையை உறுதி செய்தது. நோய்வழி முதுமைக்கு முக்கிய காரணம் பல்வகையான தீராத தொற்று நோய்களும் இதர கடுமையான வியாதிகளுமே யாகும். தாறுமாறான வாழ்க்கையும், புகை பிடித்தல்—மிதமிஞ்சி மது அருந்துதல் முதலிய தீய பழக்கங்களும் நீண்ட ஆயுளுக்குப் பெரும் பகைகளாகும். புகை பிடிக்காதவர்களை விட புகை பிடிப்பவர்களிடையே, புற்றுநோய், இரத்தக் கொதிப்பு, வயிற்றுப் புண் முதலிய வியாதிகள் 10 மடங்கு அதிகமாக ஏற்படுகின்றன என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக பிரான்ஸில் 1956-ம் ஆண்டில் பல்வகையான காச நோய்களால் மாண்டவர்களை விடவும் கூடுதலானவர்கள், மிதமிஞ்சிய குடியின் காரணமாக உயிர் நீத்தனர்.

வியாதிகளும் முன்பருவ முதுமையும் தோன்றுவதற்கு, மத்திய நரம்பு அமைப்பில் ஏற்படும் அயர்ச்சி பெரிதும் பொறுப்பாகும். மாபெரும் ரஷ்ய உடல் நூல் மேதை ஐ. பி. பாவ்லோவின் சீடரும் மாணாக்கருமான பேராசிரியர் எம். கே. பெட்ரோவா, உடல் உறுப்புக்களை, நரம்பு மண்டல அயர்வு எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கண்டறிய பல ஆராய்ச்சிகள் நடத்தினார். ஒரு கோஷ்டி பரிசோதனை நாய்களை சாதாரண நிலைமைகளில் வைத்துப் பராமரித்தார். மற்றொரு கோஷ்டி நாய்களை மிகவும் கடுமையான நரம்புத் தளர்ச்சி ஏற்படும் நிலைமைகளில் நீண்ட காலம் வரை வைத்திருந்தார். பின்னே கூறிய கோஷ்டியைச் சேர்ந்த நாய்களுக்குப் பல்வகையான தோல் வியாதிகளும், கண் நோயும், உள்ளுறுப்பு வியாதிகளும், விஷக் கட்டிகளும் ஏற்பட்டன. இந்த நாய்கள் யாவும் இளமைப் பருவத்தைச் சேர்ந்தவையாக இருந்தபோதிலும், வயதுக்கு மீறிய முதுமைக் கோலத்தில் காணப்பட்டன. அவற்றின் கண்களும் மயிரும் ஒளி இழந்

தன. மயிர் உதிர்ந்து பல இடங்களில் மொட்டையாக இருந்தது. அவற்றின் பல்களும் விழ ஆரம்பித்துவிட்டன. இந்த மிருகங்கள் மீண்டும் சாதாரண நிலைமைகளுக்கு மாற்றப்பட்டு, நீண்ட ஓய்வும் வைத்தியமும் அளிக்கப்பட்ட பிறகு, முதலில் இருந்த முன்பருவ முதுமையின் அறிகுறிகளும் வியாதிகளின் அறிகுறிகளும் மறையத் தலைப்பட்டன.

நீண்ட ஆயுள் பற்றிய முழுமையான ஆராய்ச்சிக்கான அஸ்திவாரத்தை வகுத்தவர்கள் தலைசிறந்த ரஷ்ய விஞ்ஞானிகளான ஐ. ஐ. மெச்சினிகோவும், ஐ. எம். செச்சனேவும், ஐ. பி. பாவ்லோவும் ஆவர். உடல் உறுப்புகள் முதுமை அடைவதானது மிகவும் சிக்கலான நிகழ்ச்சிப் போக்கு என்பது பற்றி இன்று எவருக்கும் எவ்வித சந்தேகமும் இல்லை. மனித உடல் அமைப்பும் உடல் உறுப்புகள் யாவும் தளர்ச்சியடைவதற்குத் தனியொரு காரணம் ஏதும் இல்லை, இருக்கவும் முடியாது. முதுமையில் மனிதனின் ஆண்மைச் சக்தியைப் புதுப்பிப்பதற்காக, சில மிருகங்களின் ஜனன சுரப்பிகளைக் கத்தரித்து ஒட்டவைக்க சில தனிப்பட்ட விஞ்ஞானிகள் செய்த முயற்சி படுதோல்வி அடைந்ததற்கு இதுவே காரணமாகும்.

நீண்ட ஆரோக்கிய ஆயுளுக்கான போராட்டத்தில் வெற்றி பெறுவதற்கு, வேலையை சிக்கன உழைப்பின் அடிப்படையில் அமைத்துக்கொள்வதும், போதுமான ஓய்வு எடுத்துக்கொள்வதும், நல்ல சத்துள்ள உணவுகளை அருந்துவதும், சுத்தமான காற்றோட்டத்தை மிகப் பெருமளவிற்குப் பயன்படுத்திக்கொள்வதும், முறையான உடற் பயிற்சியிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் தொடர்ச்சியாகப் பங்கெடுத்துக்கொள்வதும், உறக்கமும் மிக்வும் அவசியமாகும். நல்ல ஆரோக்கியமான நிலைமைகளில் உடல் உழைப்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு வசதியிருந்தால், மனித உடலின் ஆரோக்கியம் பெருகி, நீண்ட ஆயுளைப் பெறுவதற்குச் சாதகமான நிலைமை ஏற்படுகிறது. சுறுசுறுப்பான வேலை ஏதும் செய்யாமல் ஒதுங்கி நிற்கும் மனிதன் மிகவும் துரிதமாக முதுமை அடைகிறான். உடல் உழைப்பு வேலையும் மூளை வேலையும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும்; வீட்டிலும் பணி மனையிலும் மிக உயர்வான சுகாதாரத் தற்காப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும். களைப்பாக உள்ளபோது தவறாமல் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் — சிறிது நேரமே ஓய்வு பெற்றாலும் பாதகமில்லை. நடுத்தர வயதினரும், குறிப்பாக வயதான பெரியோர்களும் நாள்தோறும் உலாவச் செல்ல வேண்டும்; காலை உடற்பயிற்சியை (நாள் ஒன்றிற்குப் 12 தண்டால் அல்லது வேறு ஏதா

(61-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.